Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



மங்கள நிகழ்வுகளுக்கு மங்களகரமான ஸ்தாபனம்

முற்றிலும் நவீனமயப்படுத்தி, குளிரூட்டப்பட்ட காட்சியறை

குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை,
கிளிநொச்சி.


மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 மார்கழி 07 ஹிஜ்ரி 1428 துல்கதா 19 (22.12.2005) வியாழக்கிழமை இதழ் 83

## கோப்பாய் பொலிஸ் நிலையம் மீது கிரனேட் தாக்குதல்; மூவர் காயம்!

யாழ்ப்பாணம் —

கோப்பாய் பொலிஸ் நிலையம் மீது நேற்றிரவு 9.45 மணியளவில் இனந் தெரியாத நபர்கள் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தியதாகத் தெரியவருகிறது. இந்தத் தாக்குதலில் பொலிஸ் தரப்பில் மூவர் காயமுற்றதாகத் தெரிவித்த கோப் பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி - விபரங்களை வெளியிட மறுத்துவிட்டார்.

இந்தத் தாக்குதலை அடுத்து இராச வீதிப் பகுதியில் பதற்றம் நிலவியது. இதேவேளை - கோண்டாவில் பகுதியிலுள்ள இராணுவ முகாம் ஒன்றின் மீதும் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

நேற்றிரவு 9 மணியளவில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கச்சாயில் தாக்குதல் சிப்பாய் உயிரிழப்பு!

### இரண்டு மேஜர்கள் உட்பட ஐவர் காயம்

சாவகச்சேரி —

கொடிகாமம் - கச்சாய்ப் பகுதியில் நேற்று மாலை படையினரின் வாகனமொன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இராணுவக் கோப்ரல் ஒருவர் பலியானதாகவும், இரு மேஜர் தர அதிகாரிகள் உள்ளிட்ட ஐந்து படையினர் காயமுற்றதாகவும் தெரியவருகிறது.

கச்சாய் - கிளாலி வீதியூடாகச் சென்று கொண்டிருந்த இராணுவ வாகனம் மீது நேற்று மாலை 6.30 மணியளவில் இனந் தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தினர்.

இதையடுத்து மூன்று கைக்குண்டுகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கல்வியங்காட்டில் கிரனேட் வீச்சு; இரண்டு படையினருக்குக் காயம்!

யாழ்ப்பாணம் —

யாழ். கல்வியங்காட்டு சந்தியில் நேற்றுமாலை இடம்பெற்ற கிரனேட் தாக்கு தலில் இரண்டு படையினர் காயமுற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. யாழ். - பருத்தித்துறை வீதியில் கல்வியங்காடு செங்குந்தா சந்தையின் மேல்மாடியில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த படையினர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்றுமாலை 5.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இரண்டு இராணுவத்தினர் காயமடைந்தனர். காயமுற்ற படையினர் பலாலி இராணுவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இதேவேளை - இந்தத் தாக்குதலை (12 ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலைக்கழக சூழலிலிருந்து படையினரை அகற்றமுடியாது!



### கூட்டமைப்புக் குழுவிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு —

யாழ். பல்கலைக்கழகத்தைச் சூழ அமைந்திருக்கும் இராணுவத்தினரது இரு காவலரண்களையும் அகற்றி, மாணவர்களின் இயல்பான கற்றலுக்கு உதவுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடியோடு நிராகரித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலை காவலரண் மீது நேற்று அதிகாலை தாக்குதல்!

### சிப்பாய் ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் - அரியாலைப் பகுதியில் நேற்று அதிகாலை முன்னணிப் பாதுகாப்பு அரணில் நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

## யாழ்ப்பாணத்தில் பொதுமக்களை படையினர் தாக்கவில்லையாம்!

### கூட்டமைப்புக் குழுவிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு —

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள்

தொடருமாக இருந்தால் தமிழ் மக்கள் மத்தியில் வெறுப்பேற்படுமென ஜனா



யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் - அரியாலைப் பகுதியில் நேற்று அதிகாலை முன்னணிப் பாதுகாப்பு அரணில் நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று அதிகாலை 5.15 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

அரியாலை முன்னணிப் பாதுகாப்பு நிலைகளுக்கு அப்பாலிருந்து படையினர் மீது நான்கு ஐந்து தடவைகள் ரி-56 ரகத் துப்பாக்கியால் சுடப்பட்டதாகவும், இதன் போது ரி.ஏ.பண்டார என்ற சிப்பாய் படுகாயமடைந்ததாக இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.


காயமுற்ற சிப்பாய் பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்புக் குழுவிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் தாக்கப்படுவதும், துன்புறுத்தப்படுவதும் அதிகரித்துள்ளன. இந்தநிலைமை தொடரக்கூடாது. போர்நிறுத்த ஒப்பந்தம் பாதுகாக்கப்படவேண்டும். சமாதான முறைமூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென நாம் விரும்புகிறவர்கள். எனவே, தற்போதைய சம்பவங்கள் தொடருமாக இருந்தால் தமிழ் மக்கள் மத்தியில் வெறுப்பேற்படுமென ஜனாதிபதியிடம் தெரிவித்ததாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நேற்று மாலை அலரிமாளிகையில் இடம்பெற்ற சந்திப்புக் குறித்து (12 ஆம் பக்கம் பார்க்க)



# கண்காணிப்புக் குழுவினருக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாம்!

## யாழ். அரசியற்துறை வேண்டுகோள்

கொழும்பு

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் சுதந்திரமான பணிகளுக்கு எந்தவகையான அழுத்தங்களையோ, நெருக்கடிகளையோ, இடையூறுகளையோ விளைவிக்காது கண்காணிப்புக் குழுவிற்கும், அதன் கண்காணிப்பாளர்களுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

யாழ்ப்பாணத்தில் இயங்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு போர்நிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் நிறைவேற்றப்படுவதை கண்காணிப்பதற்காக அமைக்கப்பட்டது.

இந்தக் குழுவில் ஐரோப்பிய நாடுகளான நோர்வே,சுவீடன், பின்லாந்து, டென்மார்க், ஐஸ்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் இடம்பெற்றுள்ளனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

# இணைத் தலைமை நாடுகளில் இந்தியாவும் இணையவேண்டும்!

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை

கொழும்பு

இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் குழுவில் இந்தியாவும் இணைந்து கொள்ளவேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்தியாவுக்கு மேற்கொள்ளவுள்ள தனது பயணம் குறித்து அலரிமாளிகையில் நேற்று மாலை இந்திய பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது -

எதிர்வரும் 27 ஆம் திகதி இந்தியாவுக்கு நான்கு நாள் விஜயமாகச் செல்லும்போது இலங்கை இனப்பிரச்சினையின் சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலைகுறித்து இந்தியத் தலைவர்களுக்கு விளக்கமளிக்கவுள்ளேன். இந்தியாவை இலங்கையின் சமாதான முயற்சிகளில் முக்கியமான பங்கை வகிக்குமாறு கோரவுள்ளேன்.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியா ஈடுபடுத்தப்பட (12 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் சோதனைகள் வடபகுதியில் அதிகரிப்பு

## இராணுவத் தளபதி சரத் பொன்சேகா

கொழும்பு

வடபகுதியில் இராணுவத்தின ரின் சோதனை நடவடிக்கைகள் அதிகரிக்கப்படவுள்ளதாக இராணுவத் தள பதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது - புதிய திட்டத்தின் அடிப்படையில் பிரதேசத்தின் காவலரண்களும் அதிகரிக்கப்படவுள்ளன. வடபகுதி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே (12 ஆம் பக்கம் பார்க்க)


ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
EXPOAIR
021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
Your friend in the skies...
இலங்கையில்
முன்னணி வகிக்கும்
உங்கள் உள்ளூர்
விமான சேவை...


# மக்கள் மீதான தாக்குதலை நிறுத்தாவிட்டால் எமது தலைவிதியை நாமே தீர்மானிப்போம்

## தொழில்நுட்பக்கல்லூரி மாணவர் ஒன்றியம் ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் மக்கள் மீதும், மாணவர் மீதும் இராணுவத்தினர் நடத்திவரும் கண்மூடித்தனமான தாக்குதல்களை உடன் நிறுத்தி மாணவர்களினதும், மக்களதும் சுதந்திரமான வாழ்வுரிமையை உடன் ஏற்படுத்த வேண்டும்.

இதனை உதாசீனம் செய்து புதிய அரசு செயற்படுமானால் தமிழ் மக்களின் தலைவிதியை நாமே தீர்மானிக்கும் நிலைமை உருவாகும் என யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கை அரசுக்கும் எமது ஏகப் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர், எமது வாழ்வில் மாற்றம் வரும் என எண்ணியிருந்தோம். எனினும் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு நான்கு வருடங்கள் கடந்த நிலையிலும் எமது வாழ்வில் இயல்புநிலை தோன்றவில்லை. இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பவும் இல்லை.

புரிந்துணர்வு ஒப்பந்தப்படி மக்கள் வாழ்விடங்களில் இருந்தும், பாடசாலைகளில் இருந்தும், வணக்கத் தலங்களில் இருந்தும் இராணுவம் வெளியேறவும் இல்லை. மாறாக உயர் பாதுகாப்பு வலயம், பாதுகாப்பு வலயம், இராணுவ காவலரண்கள் என எமது வாழ்விடங்கள் பறிக்கப்பட்டு இராணுவ அராஜகங்கள் மேலோங்கிய வண்ணம் உள்ளன.

நாம் சமாதான வழியில் அகிம்சை ரீதியாக அனைவருக்கும் சொல்லிக் களைத்துவிட்டோம்.

ஆனால் மாறி மாறி ஆட்சிக்கு வந்த எந்தவொரு அரசாங்கமும் எமக்கு நல்லதொரு தீர்வைத்தரவில்லை. மாறாக தமிழ்மக் கள் வாழ்வில் மாறாவடுக்களையே தந்தவண்ணம் உள்ளன.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தாங்கள் பதவியேற்ற பின்பு என்றுமில்லாதவாறு தமிழ் மக்கள் மீதும், தமிழ் மாணவர்களாகிய எம் மீதும் இராணுவ அராஜகம் கட்டவிழ்த்து விடப்பட்டமை எமக்கு பெரும் ஏமாற்றத்தினையே தருகின்றது. தொடர்ந்தும் தமிழ் இளைஞர்கள் யுவதிகள் இராணுவத்தினாலும் உடன் இயங்கும் ஒட்டுக்குழுக்களாலும் படுகொலை செய்யப்படுவது அதிகரித்த வண்ணமே உள்ளன.

இன்று எல்லாவற்றையும் கடந்து உயர் தொழில்நுட்பவியல் நிறுவன மாணவர்களாகிய எம்மீதும் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் மீதும் அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் மீதும் இராணுவம் தனது அராஜகப் போக்கினை கட்டவிழ்த்து விட்டுள்ளமையானது - கடும் இராணுவப் போக்குடைய புதிய இராணுவத்தளபதியின் கட்டளைப்படியே நடந்துவருகின்றது. தொடரும் சுற்றிவளைப்புக்கள், கைதுகள், மக்களையும், மாணவர்களையும் வீதிகளில் பொல்லுகள், துப்பாக்கியால் தாக்குவது, தமிழ்ப் பெண்களைக் கோரமாக படுகொலை செய்தல் என இராணுவ கடும் போக்கானது கடைப்பிடிக்கப்படுகிறது. இவை யாவும் இராணுவத்தினரால் போர்நிறுத்த ஒப்பந்த சரத்துகளினை மீறி செய்யப்படுகின்றது. இவை மிகவும் மோசமான சூழலை உருவாக்குமெனச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

கடந்த சில வாரங்களாக யாழ். குடாநாட்டில் இராணுவ அராஜகங்கள் என்றுமில்லாதவாறு அதிகரித்திருப்பதுடன், புதிய காவலரண் அமைத்தல், பாடசாலையினுள் புதிய அரண் அமைத்தல், வீதிகள் எங்கும் இராணுவத்தினர் துப்பாக்கிகள் சகிதம் கறுப்புத்துணிகட்டிய முகத்துடன் நின்று மக்களையும், மாணவர்களையும் மிகவும் மோசமாக அச்சுறுத்துதல் என நீண்டு செல்கின்றன.

இதன் ஒரு கட்டமாகவே புங்குடுதீவு மடத்து வெளிப் பகுதியில் வைத்து கடற்படையினரால் அவர்களின் முகாமிற்கருகில் இருக்கும் இருபது வயதுடைய இளையதம்பி தர்சினி கோர பாலியல் படுகொலைக்கு உட்படுத்தப்பட்டு அருகில் உள்ள பாழடைந்த கிணற்றினுள் வீசப்பட்டுள்ளார். இந்தச் செயற்பாட்டினை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அத்துடன் தர்சினியின் உறவுகளுக்கு ஆறுதல் கூறுவதற்காகவும், உதவி செய்யும் முகமாகவும் புங்குடுதீவு செல்ல முற்பட்டவேளை பரமேஸ்வரா சந்தியில் வைத்து எவ்வித காரணமும் இன்றி இருபதிற்கும் மேற்பட்ட தொழில்நுடபக் கல்லூரி, உயர் தொழில்நுட்ப நிறுவன, பல்கலைக்கழக மாணவர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டமை நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழகத்தினுள் அத்துமீறி நுழைந்து துப்பாக்கிச் சூடு நடத்தி விரிவுரையாளர் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரி மாணவன் க.கௌரிசெந்தூரன் ஆகியோரைக் கைதுசெய்தமையானதும் பாரிய யுத்தநிறுத்த மீறல் என்பதனை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

கடந்த பல வாரங்களாக எமது நிறுவனத்திற்கு முன் இராணுவத்தினர் துப்பாக்கி சகிதம் நின்று எமது நிறுவன மாணவர்களைத் தாக்குவதுடன் அதிபர், விரிவுரையாளர், உத்தியோகத்தர்களை வழிமறித்து திருப்பியனுப்புவதும் கடும் சோதனைக்குள்ளாக்குவதும் மிகவும் மனவருத்தத்திற்குரிய விடயமாகும்.

குறிப்பாக தொழில்நுட்பக் கல்லூரி, உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம், பல்கலைக்கழகம் ஆகியன அமைந்துள்ள பகுதிகளில் இருந்து இராணுவ நடமாட்டத்தை அகற்றி எமது மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு வழிவகுக்குமாறும், மாணவர்கள் மீதான கண்மூடித்தனமான தாக்குதல்கள், மாணவர்களின் தங்குமிடத்தை சுற்றிவளைத்து சோதனை செய்தல், மாணவர் அடையாள அட்டையைக் கிழித்தெறிதல், பாடசாலைப் பகுதிகளில் காவலரண் அமைத்தல் போன்ற செயற்பாடுகளை நிறுத்தி மாணவர்களினதும் மக்களினதும் சுதந்திரமான வாழ்வுரிமையை உடன் நிலைநிறுத்துமாறும் வேண்டிக்கொள்கிறோம்.

எமது வேண்டுகோளை உடன் நடைமுறைப்படுத்துமாறு கூறி நிற்கின்றோம். எமது தீர்க்கமான முடிவு உதாசீனம் செய்யப்படுமேயானால் நாமே எமது தலைவிதியை நிர்ணயிக்கும் துர்ப்பாக்கிய நிலை உருவாகும் என மன வேதனையுடன் தெரியப்படுத்துகிறோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குடாநாட்டில் சுற்றிவளைப்பு தேடுதல்களை நிறுத்த ஜனாதிபதி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## புதிய ஜனநாய கட்சி வேண்டுகோள்

கொழும்பு —

தமிழ் மக்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் தாக்குதல்கள், மற்றும் சுற்றிவளைப்பு தேடுதல்களை உடன் நிறுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுக்க வேண்டும் என புதிய ஜனநாயக கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

குடாநாட்டில் தற்பொழுது ஏற்பட்டிருக்கும் இராணுவ அடாவடித்தனங்கள் குறித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் பொதுச் செயலர் சி.கா. செந்திவேல் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இரண்டு நாட்களின் முன்னர் யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து கண்காணிப்புக்குழுவின் பணிமனைக்கு ஊர்வலமாகச் செல்ல முற்பட்டபோது அதனை வழிமறித்த இராணுவத்தினர் ஊர்வலம் மீது கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தி துப்பாக்கிச் சூட்டையும் மேற்கொண்டனர்.

இதனால் அமைதியாக ஊர்வலம் சென்ற மாணவர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என்போர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். பழிதீர்த்துக்கொள்ளும் வகையில் அமைந்த மேற்படி கண்மூடித்தனமான தாக்குதலானது யுத்தமுனைப்புக்கொண்ட செயலாகவே கருத வேண்டியுள்ளது. பல்கலைக்கழக சமூகத்தினர் மீது இராணுவத்தினர் நடத்திய இந்தத் தாக்குதலை புதிய - ஜனநாயக்க கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

அத்துடன் இதுபோன்ற தாக்குதல்களை ஏனைய இடங்களிலும் மேற்கொண்டு மக்கள், மாணவர்கள் மீது பழிதீர்த்துக்கொள்ள இராணுவத்தினர் முனைந்து நிற்பதைத் தடுத்து நிறுத்துமாறு அரசாங்கத்தை எமது கட்சி கேட்டுக்கொள்கிறது.

புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவியேற்று ஒரு மாதம் சென்ற நிலையில் பேச்சுவார்த்தையையும் சமாதான சூழல் நீடிப்பதையும் வடக்கு - கிழக்கு மக்கள் உட்பட அனைத்து மக்களும் எதிர்பார்த்திருந்த சூழலிலேயே யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர் மீதான இராணுவத்தின் மோசமான தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

இதனால் மக்கள் அச்சமும் பீதியும் அடைந்துள்ளதுடன் யுத்தம் வந்துவிடுமோ என்ற ஏக்க சிந்தனைக்கும் ஆட்பட்டிருக்கிறார்கள். மக்களது அன்றாட இயல்பு வாழ்க்கையைச் சீர்குலைக்கும் வகையிலான இத்தகைய இராணுவத்தாக்குதல்கள் மற்றும் சுற்றிவளைப்புத் தேடுதல்கள், கைதுகள் போன்றவற்றை உடனடியாகத் தடுத்து நிறுத்த ஜனாதிபதியும் அரசாங்கமும் தாமதமற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதையும் புதிய ஜனநாயகக் கட்சி வற்புறுத்துகின்றது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களை சர்வதேசம் உன்னிப்பாக கவனிக்க வேண்டும்

## யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர் தமிழ் மக்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் அடாவடித்தனங்களை சர்வதேச சமூகம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும் என யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்.குடாநாட்டு மக்கள் மீது இராணுவத்தினர் நடத்திவரும் கண்மூடித்தனமான தாக்குதல்களைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த இரண்டு வாரங்களில் மிகவும் மிலேச்சத்தனமான, கையாலாகாத்தனமான தாக்குதல்களையும், மிரட்டல்களையும் செய்வதுடன் மட்டுமல்லாது - இராணுவ இயந்திரங்களையும், துப்பாக்கி வேட்டுக்களையும் எந்தவித முன்னறிவிப்புகளுமின்றி பொது மக்கள் மீது பயன்படுத்துவது சமா தான காலகட்டத்தில் அனாவசியமானது. இது எம்மைப் பொறுத்தவரையில் தென்னிலங்கை அரசும், இனவாதிகளும் சேர்ந்து அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கான அதிகார ஆதிக்கத்தின் மிகவும் கோழைத்தனமான செயற்பாடாகும்.

பெண்கள் இராணுவ வெறியாட்டத்திற்குப் பலியிடப்படுவதையும், அவர்களுடைய உரிமைகள் மீறப்படுவதையும் அனுமதிக்க முடியாது. இது திட்டமிட்ட ரீதியில் அமைதியான வாழ்வை வாழ எண்ணும் மக்களை தீவகத்திலிருந்து முற்றாக விரட்டியடிப்பதற்கு இராணுவம் செய்யும் சதி செயற்பாடாகும். எனவே புங்குடுதீவில் படுகொலை செய்யப்பட்ட தர்சினியின் கொலை சூத்திரதாரிகளான கடற்படையினரைச் சர்வதேச சமூகத்தின் நேரடிக் கண்காணிப்பில் ஒரு குழுவை அமைத்து விசாரணை நடத்த வேண்டும். அத்துடன் தீவகத்திலிருந்து இராணுவம் முற்றாக வெளியேற வேண்டும். அவ்வாறான ஒரு நிலை ஏற்படும் பட்சத்தில்தான் தீவக மக்களின் மனித மாண்பு காக்கப்படும் என்பதைச் சர்வதேச சமூகம் தனது கருத்தில் கொள்ளவேண்டும்.

அதேவேளை, கடந்த ஓரிரு நாட்களில் யாழ்.நகரப் பகுதிகளிலும், யாழ். பல்கலைக்கழக சுற்றாடலிலும் நடைபெற்ற அராஜகங்கள் ஒரு ஜன நாயக நாட்டில் மக்களுக்கிருக்கும் உரிமைகளை இராணுவ சப்பாத்துக்களினால் மிதித்து அடக்க நினைப்பது அந்த மக்களுக்கு இருக்கின்ற உரிமைகளைப் பறிப்பதற்கு ஒப்பானதாகும்.

எந்தச் சரித்திரத்திலும் இவ்வாறான அடக்குமுறைகள் மேலோங்கி வெற்றி பெற்றதாக இல்லை என்பதனை அரசும், அதன் இராணுவ அதிகாரமையங்களும் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். எங்களுடைய பேராசிரியர்கள், மாணவர்கள், சாரதிகள், பொதுமக்கள், பெண்கள் தாக்கப்படுவதும் கைது செய்யப்படுவதையும் கேள்விப்படும்போது எமது மக்கள் மென்மேலும் பலமடைந்தவர்களாக, விடுதலை வீச்சு அதிகம் கொண்டவர்களாக எழுவார்கள். ஆனாலும், யாழ்.குடாநாட்டின் மக்கள் ஒரு பண்பாட்டுக்கலாசாரத்தில் வளர்க்கப்பட்டவர்கள் என்பதால் சற்றுப் பொறுமை காக்கிறார்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவாவதற்கு முன்னர் யுத்தகாலங்களில் பண்டிகை நாட்களுக்கென்று ஒரு அமைதிநிலையை அனைவரும் கடைப்பிடிப்பார்கள். ஆனால் அதனை திட்டமிட்டு தென்னிலங்கை அரசும், அதன் சகபாடிகளும் இணைந்து பண்டிகை நாட்களுக்கான அமைதியை சீர்குலைக்கின்றன.

மாணவர்களின் கல்விக் கூடங்களில் முன்அனுமதி இன்றி நுழைவது மாத்திரமின்றி துப்பாக்கி வேட்டுக்களைச் சரமாரியாகப் பொழிந்து மாணவர்களையும், விரிவுரையாளர்களையும் கைதுசெய்ய நினைப்பதும், கைது செய்வதும் தமிழ் மக்களின் மூலதனமான கல்வியைச் சிதைக்கும் சதியாகவே நாம் கருதுகிறோம். அது மாத்திரமன்றி சாத்வீகமாக, தமது ஜனநாயக உரிமைகளுக்காக, வெறுமையாய்ச் செல்லும் மாணவர்களையும், பொதுமக்களையும் தங்கள் துப்பாக்கிகளால் தாக்கி வருகின்றனர்.

இரண்டு ஊடகவியலாளர்கள் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டு மிகவும் கோரமாகத் தாக்கப்பட்டு, உடமைகள் பறிக்கப்பட்டு இராணுவ வாகனங்கள் முன் ஓடவிடப்பட்டு விடுவிக்கப்பட்டதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சர்வதேசத்தின் ஊடக காப்பக மையங்கள் யாழ்.குடாநாட்டின் ஊடகவியலாளர்களுக்கு பூரண பாதுகாப்பைக் கொடுப்பதுடன் இங்கு நடைபெறும் இராணுவத்தினரின் அராஜகப் போக்கை சர்வதேச மட்டத்திலான செய்தித்தாபனங்களுக்கு உண்மையுடன் வெளிப்படுத்த முன்வர வேண்டும் எனவும் யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையினராகிய நாம் கேட்டுக்கொள்கிறோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் நாகம்ஸ்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
அக்ஷன் கிங் அர்ஜுன், நமீதா மற்றும் பலர் நடித்த




தற்காலிக புதியநேர மாற்றம்
காட்சிகள்:- காலை 11.00 ,3.00, 7.00 (பு.நே)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
பிரசன்னா, லைலா, பிரகாஷ்ராஜ் மற்றும் பலர் நடித்த
கண்ட நாள் முதல்
காட்சிகள்;- 10.30, 2.00, 5.15, 8.15, (புதிய நேரம்)

மோட்ஷ தீப ஆராதனை



அமரர் அருட்கவி. கவியோகி கலாநிதி சீ.விநாசித்தம்பி புலவரின் மோட்ஷ தீப கிருத்தியங்கள் இன்று 22.12.2005. அன்னசுரபி மண்டபத்தில் நடைபெறும் வேளையில் அவரது ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

மத்தியகிழக்கு வீதி, றெக்கிளமேசன், குருநகர், யாழ்ப்பாணம்.
இ.சிலுவைதயாளன் (ஜே.பி) ஜீவா தம்பதிகள், பிள்ளைகள்.

மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியா இலங்கை ஒரேதின வெளியீடாக
சூரியா, திரிஷா, வடிவேல், நடித்த
DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்



ஆறு
காட்சிகள்
10.30, 1.30, 4.30, 7.30, 10.30

ராஜா யாழ்ப்பாணம்
பிரசன்னா, மீராஜஸ்மின் மற்றும் பலர் நடித்த
கஸ்தூரிமான்
காட்சிகள்:-10.30,2.30, 6.30 , 9.30 (பு.நேரம்)

நிறைஞ்சனாஸ் சங்கானை
சத்தியராஜ், சுகன்யா, நெப்போலியன் நடித்த
அடி தடி
காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)

# இராணுவத்தின் செயற்பாடுகள் முழுமையாக முடக்கவேண்டும்!

## இரா. சம்பந்தன் தெரிவிப்பு



கொழும்பு—

இளம் பெண்ணொருவர் யாழ்ப்பாணத்தில் பாலியல் வல்லுறவுக்குட் படுத்தப்பட்டு கொலை செய்யப்பட் டுள்ளார். இது மிகவும் பாரதூரமான விடயமாகும். இவரின் மரணச் சடங்கிற்குச் செல்ல முற்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் பி.பி.சி தமிழோசைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

இந்த விடயம் குறித்து யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என அனைவரும் இணைந்து கண்காணிப்புக் குழுவிடம் முறையிடசென்ற வேளை தடுத்து நிறுத்தப்பட்டு தாக்கப்பட்டுள்ளனர். இது மிகவும் பாரதூரமான விடயம். பலர் துப்பாக்கிப் பிரயோகத்தினால் காயமடைந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது.

எனவே, இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றில் கவன ஈர்ப்பு பிரேரணை ஒன்றை அத்தியாவசிய தேவையாக எழுப்ப வேண்டுமென எண்ணியிருந்தோம். அதைத் தொடர்ந்து எமது உணர்வலையை வெளிப்படுத்தும் வகையில் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சற்று நேரம் நாடாளுமன்றினுள் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

இதன்பின் சபாநாயகர் அறையில் பிரதமர் எம்மைச் சந்தித்து- தான் ஜனாதிபதியுடன் பேசி பதிலளிப்பதாக கூறினார். பின்னர் இந்தச் சம்பவம் தொடர்பாக ஆராய விசாரணைக்குழுவொன்றை அமைக்க முடிவெடுத்துள்ளதாக எமக்கு அறிவித்துள்ளனர்.


இந்த விசாரணைக்குழுவின் அறிக்கை வெளிவருவதற்கு பல வாரங்கள், மாதங்கள், வருடங்கள் கூடச் செல்லலாம். அத்துடன், இந்த விசாரணைக்குழுவின் அறிக்கைகள் தொடர்பாக எமக்கு போதிய அனுபவமுள்ளது.

எனவே, இந்த விசாரணைக் குழுவின் மூலமாக நிலைமையை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாமென நாம் நினைக்கவில்லை. இது விடயம் தொடர்பாக மேலதிகமாக நாம் என்ன செய்ய வேண்டுமென்பது குறித்து நாம் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

யாழ்ப்பாணத்தில் நிலைமை மாற வேண்டும். அங்கு விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை. இராணுவத்தினுடைய முழுமையான செயற்பாடுகள் யாழ்ப்பாணத்தில் நிறுத்தப்பட வேண்டும். அதுதான் எமது கோரிக்கை. யாழ்ப்பாணத்தில் பொதுமக்களை இராணுவம் தாக்கியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக நாம் தீர்க்கமான முடிவெடுக்கவுள்ளோம். அது குறித்து இப்போது எதுவும்சொல்ல முடியாதென அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆளும் கூட்டணி கட்சிகள் மீது ஐ.தே.கட்சியினர் அதிருப்தி!



கொழும்பு—

சமாதான செயற்பாடுகள் தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் அமைதிகாத்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அதிருப்தி தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இளைஞர் முன்னணியின் குழு உறுப்பினர்கள் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது -

சுயாட்சித் தீர்வை ஏற்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்த இந்த அரசியல் கட்சிகள், இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாகத் தமது நிலைப்பாட்டை நாட்டுக்குத் தெளிவுபடுத்தி, சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

ஐ.தே.கட்சியைக் குறைகூறி எமக்கெதிராக பிரசாரத்தை மேற்கொண்ட ஜனாதிபதி ராஜபக்ஷ தற்போது சமாதான முயற்சிகள் தொடர்பாக என்ன செய்து கொண்டிருக்கிறார்.

ஐ.தே.கட்சியில், எதிர்காலத்தில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சரசாலையில் தேடுதல் ஆயுதங்கள் சிக்கின!

கொழும்பு—

தென்மராட்சி சரசாலைப் பகுதியில் படையினர் நடத்திய தேடுதலின்போது வீடொன்றில் இருந்து ஆயுதங்கள் சிலவற்றைக் கைப்பற்றியிருப்பதாக படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

சரசாலை வடக்கில் கடந்த திங்கட்கிழமை மாலை 5.30 மணியளவில் படையினர் தேடுதல் நடத்தியபோதே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டன. ஒரு சொட் கண் துப்பாக்கி, 7.62 ரவைகள் ஐந்து, சொட் கண் ரவைகள் 2, 81 மில்லிமீற்றர் மோட்டார் குண்டுகள் 2 ஆகியவையே படையினரால் கைப்பற்றப்பட்டன.

இந்த ஆயுதங்கள் வைக்கப்பட்டிருந்த வீட்டின் உரிமையாளரான வன்னிசெல்வம் நவசெல்வம் என்பவர் படையினரால் கைதுசெய்யப்பட்டு சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

# அடுத்த உள்ளூராட்சி தேர்தலில் ஹெல உறுமய தனித்துப் போட்டி



கொழும்பு—

உள்ளூராட்சி சபைகளுக்கு நடைபெறவுள்ள தேர்தல்களில் எந்தக் கட்சியுடனும் கூட்டுச் சேராமல் தனித்துப் போட்டியிடப் போவதாக ஜாதிக ஹெல உறுமய தீர்மானித்துள்ளது.

தெற்கு, மேற்கு, வடமேற்கு, வட மத்திய, மத்திய, ஊவா மாகாணங்களுக்கும், கிழக்கு மாகாணத்தின் சில இடங்களுக்கும் தங்கள் கட்சியின் சார்பில் வேட்பாளர்களை நிறுத்தவுள்ளதாகவும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற குழுத்தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

தங்கள் கட்சியால் வேட்பாளர்கள் நியமிக்கப்படுகையில் மாநகர சபைகளில் மாநகர மேயர் பதவிக்கும் நகர சபை மற்றும் பிரதேசசபைகளுக்கான தலைமைப் பதவிகளுக்கு பிக்குமாரை நியமிக்கவுள்ளதாகவும், ஏனைய வேட்பாளர்களில் 90 வீதமானவர்கள் சாதாரண பொதுமக்களாக இருப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

### புங்குடுதீவுச் சம்பவம் குறித்து

# விரிவான அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவு!

கொழும்பு—


புங்குடுதீவில் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பின்னர் கிணற்றுக்குள் தூக்கி வீசப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்ட இளையதம்பி தர்சினி (வயது 20) யின் மரணம் தொடர்பாக விரிவான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மகிந்த, பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸாரின் அறிக்கை கிடைக்கப்பெற்றதும், இந்தச் சம்பவம் தொடர்பாக ஆராயவென முன்னாள் நீதியரசர் யாவிட் யூசுப் தலைமையிலான குழுவொன்றை அமைக்கவும் ஜனாதிபதி ராஜபக்ஷ இணங்கியுள்ளதாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கின் தற்போதைய நெருக்கடி நிலைமை, மற்றும் புங்குடுதீவில் யுவதி ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமை குறித்த சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் - நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத்தலைவர் இரா. சம்பந்தன் நாடாளுமன்றில் ஆற்றிய உரையையடுத்தே பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியா உதவி வழங்கக்கூடாது!

## ஈரோட்டில் வை.கோ தெரிவிப்பு



சென்னை—

பழங்காலத்தில் இருந்தே ஈழத்தில் தமிழர்கள் தனி இனமாக வாழ்ந்ததற்கு சான்று உள்ளது. சிங்கள மொழி பிரதானப்படுத்தப்பட்டபோதுதான் தனி ஈழப் பிரச்சினை எழுந்தது.தனி ஈழம் அமைப்பது தான்தனி இலங்கைப்பிரச்சினைக்கு ஒரே தீர்வாக இருக்க முடியும். என வை.கோ தெரிவித்தார்.

ஈரோட்டில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெரியாரின் தமிழ்த்தேசியம் எனும் நூலை வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய - இலங்கை இராணுவ ஒப்பந்தம் அண்மையில் கையெழுத்தாக இருந்தபோது அதற்கு எதிராக பிரதமர் சோனியா காந்தி பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரிடம் பேசினேன். அதையடுத்து ஒப்பந்தம் கைவிடப்பட்டது.

இப்போது இலங்கையின் கட்டுப்பாட்டில் இருக்கும் பலாலி விமான நிலையத்தின் ஓடுதளத்தை இந்தியாவின் உதவியுடன் சீரமைத்து வருவதாக இலங்கை விமானப்படைத்தளபதி கூறியுள்ளார். இந்திய அதிகாரிகள் விரைவில் பார்வையிட வரவிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பலாலி விமானத்தளத்தைப் பயன்படுத்தி 5 லட்சம் தமிழர்களை இலங்கை இராணுவம் கொன்றது. எனவே இந்த விமான தளம் சீரமைக்கப்பட்டால் தமிழர்களுக்கு ஆபத்து ஏற்படும். தமிழர்களின் வரிப்பணத்தைப் பயன்படுத்தி அவர்கள் அழிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இலங்கை இராணுவத்துக்கு இந்தியா ஏற்கனவே உதவி செய்துள்ளது. மீண்டும் இதுபோல அந்த நாட்டு இராணுத்துக்கு உதவக்கூடாது.

இலங்கையில் போர் மேகம் சூழ்ந்திருப்பதாக பத்திரிகை செய்திகள் வெளியாகின்றன. இலங்கைக்கு உதவி செய்யும் முடிவை பிரதமர் மன்மோகன் சிங் எடுக்கமாட்டார். ஆனால், ஒரு சில இந்திய அதிகாரிகள் இலங்கைக்கு உதவத் தயாராக இருப்பதாக எனக்கு தகவல் வந்துள்ளதால் இந்தக் கருத்து அவர்களுக்கு எச்சரிக்கையாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

# வயோதிபர் சுடப்பட்டு காயம்!

கொழும்பு—

பிரிட்டிஷ் இராணுவத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற வயோதிபர் ஒருவர் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை திருமலை - குச்சவெளிப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. ஆயுதம் தாங்கிய மூவர் தம்மீது பிஸ்டலால் சுட்டதாக 76 வயதான சிவகுரு சிவலோகலிங்கம் என்ற வயோதிபர் தெரிவித்தார்.

படுகாயமுற்ற இவர் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

# சுனாமி முதலாமாண்டு நினைவு

கொழும்பு—

இலங்கைத்தீவு முழுவதும் சுனாமி அனர்த்தத்தில் மொத்தம் 35 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தோருக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் எதிர்வரும் திங்கட்கிழமை நாடு முழுவதும் 9.24 மணி முதல் இரு நிமிட நேரம் அமைதிகாத்து நினைவுகூரலை கடைப்பிடிக்குமாறு அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த நினைவுகூரலின்போது அனைத்து வாகனப் போக்குவரத்தையும் நிறுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அனைத்து மத வழிபாட்டு இடங்களிலும் 9.24 மணிக்கு மணியோசை எழுப்பப்படும். அப்போது அனைத்து மக்களும் 2 நிமிடம் அமைதிகாத்து இரங்கல் தெரிவிக்குமாறு அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

# 4 லட்சம் குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணம் நிறுத்தம்!


கொழும்பு—

வசதி படைத்த சுமார் 4 லட்சம் குடும்பங்களுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 5 ஆம் திகதியுடன் சமுர்த்தி நிவாரணம் வழங்குவதை நிறுத்த சமுர்த்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது சமுர்த்தி நிவாரணம் பெறும் 20 லட்சம் பேரில் 20 வீதமானவர்கள் இந்த நிவாரணங்களைப் பெறுவதற்குத் தகுதியற்றவர்கள் என்று சமுர்த்தி விவகார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

எதிர்வரும் 5 ஆம் திகதிக்குள் தகுதியற்றவர்கள் தங்களின் சமுர்த்தி பெறுவதற்கான அட்டைகளைக் கொண்டுவந்து தர வேண்டும் என்றும், 5 ஆம் திகதியின் பின்னர் ஆய்வு நடத்தி அவர்கள் அனைவரையும் சமுர்த்தி திட்டத்திலிருந்து நீக்கிவிடுவதுடன் அவர்களுக்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்தார்.

சுய விருப்பத்தின்பேரில் அட்டைகளைத் திருப்பி வழங்குவோருக்கு வருடாந்தம் வழங்கப்படும் 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவும், குழந்தை பிறப்பு மற்றும் திருமணங்களின் போது வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவும் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



# இலங்கை வெற்றி பெற 509 ஓட்டங்கள் இலக்கு

அகமதாபாத் —

இலங்கை - இந்திய அணிகளுக் கிடையில் அகமதாபாத்தில் இடம் பெற்றுவரும் மூன்றாவதும், இறுதியு



மான டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற 509 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.


நேற்றுமுன்தினம் ஆட்டநேர முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 287 ஓட்டங்களை எடுத்திருந்த இந்திய அணி நேற்றும் ஆட்டத்தைத் தொடர்ந்தது.

நேற்று காலை பனிப்பொழிவால் மைதானம் ஈரமாக இருந்தது. எனவே அரை மணிநேரம் தாமதமாக 10 மணிக்குப் போட்டி தொடங்கியது.

நேற்று போட்டி தொடங்கியதும் ஹர்பஜன் சிங் தனது அதிரடி ஆட்டத்தைத் தொடங்கினார். பவுண்டரியை நோக்கிப் பந்துகள் பறந்தன.

ஹர்பஜன் 40 ஓட்டங்களையும், கும்ளே 29 ஓட்டங்கயையும் எடுத்திருந்த நிலையில் இந்திய அணி ஆட்டத்தை இடைநிறுத்தியது. ஹர்பஜன் சிங் 51 பந்துகள்ள எதிர்கொண்டு 4 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் இந்த ஓட்டங்களை எடுத்திருந்தார். இந்திய அணி 9 விக்கெட் இழப்புக்கு 316 ஓட்டங்களை எடுத்திருந்தது.

முதல் இனிங்ஸில் எடுத்திருந்த



398 ஓட்டங்களையும் சேர்த்து இந்திய அணியின் ஸ்கோர் 714 ஆகும்.

இலங்கை முதல் இனிங்ஸில் 206 ஓட்டங்களை மட்டும் எடுத்திருந்தது. இதனால் இந்தியா 508 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

எனவே, 509 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்கில் இலங்கை 2 ஆவது இனிங்ஸில்



ஆடியது.

கப்டன் அத்தப்பத்துவும், தரங்கவும் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர்.


ஸ்கோர் 39 ஆக உயர்ந்தபோது இலங்கையின் தொடக்க ஜோடி சரிந்தது. அத்தப்பத்து 16 ஓட்டங்களில் ஹர்பஜன்சிங்கின் பந்தில் ஆட்டமிழந்தார். அத்துடன் மதிய உணவு இடைவேளை வந்தது.

மதிய உணவு இடைவேளையின்போது இலங்கை அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 39 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மதிய உணவு இடைவேளைக்குப் பின்னர் தரங்கவுடன் ஜோடி சேர்ந்த சங்ககார 17 ஓட்டங்களில் கும்ளேயின் பந்தில் ஆட்டமிழந்தார். அப்போது இலங்கையின் ஸ்கோர் 84 ஆக இருந்தது.

அடுத்து தரங்கவுடன், ஜெயவர்த்தன களமிறங்கினார். இருவரும் நிதானமாக விளையாடினார்கள். இந்த நிலையில் 47 ஓட்டங்கள் எடுத்திருந்த தரங்க, கும்ளேயின் பந்தில் கம்பீரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து 4 ஆவது விக்கெட் ஜோடியாக ஜெயவர்த்தனவுடன், சமரவீர களமிறங்கினார். இவர் 5 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் கும்ளேயின் பந்தில் கைவ்விடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அப்போது இலங்கை



அணி 4 விக்கெட் இழப்புக்கு 96 ஓட்டங்களை எடுத்திருந்தது. அடுத்து 5 ஆவது விக்கெட் ஜோடியாக ஜெயவர்த்தனவுடன், டில்சான் களமிறங்கினார்.

இருவரும் நிதானமாக விளையாடினார்கள். இந்த ஜோடியை வீழ்த்தமுடியாமல் இந்தியப் பந்துவீச்சாளர்கள் திணறினர். பந்துவீச்சை மாற்றிப் பார்த்தும் பலனில்லை. கடைசியாக இலங்கை அணி 201 ஓட்டங்களை எடுத்திருந்தபோது ஜெயவர்த்தன 57 ஓட்டங்களில் அகர்கள் வீசிய பந்தை அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.



அடுத்து 6 ஆவது விக்கெட்டாக முபாரக் களமிறங்கினார். சிறப்பாக விளையாடிய டில்சான், பதான் பந்தில் 65 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதனைத்தொடர்ந்து மஃரூப் கள மிறங்கினார்.

இந்த ஜோடி நேற்று 4 ஆவது நாள் ஆட்டம் முடியும்வரை ஆட்டமிழக்காமல் நின்றது. இலங்கை 2 ஆவது இனிங்ஸில் 6 விக்கெட் இழப்புக்கு 235 ஓட்டங்களை எடுத்துள்ளது. இன்னும் வெற்றிபெற 274 ஓட்டங்கள் தேவை. கைவசம் 4 விக்கெட் மீதமுள்ளது.

முபாரக் 18 ஓட்டங்களுடனும், மஃரூப் 2 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

இந்திய தரப்பில் கும்ளே 3 விக்கெட்டும், பதான், ஹர்பஜன், அகர்கர் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

# சிறந்த உதைபந்தாட்ட வீரராக ரொனால்டினோ தெரிவானார்!



சூரிச் —

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் வழங்கும் உலகின் சிறந்த வீரருக்கான விருதை தொடர்ந்து 2 ஆவது ஆண்டாக ரொனால்டினோ கைப்பற்றினார்.

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் ஆண்டுதோறும் சிறப்பாகச் செயற்படும் வீரர் வீராங்கனைகளுக்கு விருது வழங்கிக் கௌரவித்துவருகிறது. உதைபந்தாட்ட உலகின் மிக உயரிய விருதாகக் கருதப்படும் இந்த விருது வழங்கும் விழா சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

சிறந்த வீரரைத் தெரிவுசெய்வதற்கு வாக்கெடுப்பு நடந்தது. அணியின் பயிற்சியாளர்கள், கப்டன்கள் வாக்களித்தனர். இதில் பிரேசில் அணியின் ரொனால்டினோ 956 புள்ளிகள் பெற்று விருதைத் தட்டிச்சென்றார். கடந்த மாதம் இவர் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் வழங்கும் ஐரோப்பாவின் சிறந்த வீரருக்கான விருதையும் பெற்றார்.

இதன்மூலம் ஒரே ஆண்டில் இவ்விரு விருதையும் வெல்லும் 3 ஆவது பிரேசில் வீரர் என்ற பெருமையைப் பெற்றார். இதற்கு முன் 1997, 2002 இல் ரொனால்டோவும், 1999 ரிவால்டோவும் இரண்டு விருது வென்றுள்ளனர்.

இங்கிலாந்து அணியின் பிராங்க் லாம்பார்ட் 306 புள்ளிகள் பெற்று 2 ஆவது இடத்தையும், கமரூனின் சாமுவேல் இடோ 190 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்தையும் பெற்றனர். பெண்கள் பிரிவில் தொடர்ந்து 3 ஆவது முறையாக ஜேர்மனியின் பிர்ஜித் பிரின்ஸ் சிறந்த வீராங்கனைக்கான விருதைப் பெற்றார். சிறந்த அணிக்கான விருதை பிரேசில் 4 ஆவது முறையாக தட்டிச்சென்றது.

# கராச்சியில் டெஸ்ட் போட்டி; இந்திய அரசு அனுமதி!

புதுடெல்கி —

சர்ச்சைக்குரிய கராச்சி நகரில் இந்திய அணி டெஸ்ட் போட்டியில் விளையாடுவதற்கு இந்திய அரசு நேற்று அனுமதியளித்தது.

அடுத்த மாதம் பாகிஸ்தான் செல்லும் இந்திய அணி 3 டெஸ்ட் போட்டி, 5 ஒரு நாள் போட்டிகள்கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இந்தத் தொடரின்போது கராச்சியில் டெஸ்ட் போட்டியில் பங்கேற்கவேண்டுமென பாகிஸ்தான் வலியுறுத்திவந்தது.

ஆனால், வெடிகுண்டு நகராக வர்ணிக்கப்படும் இங்கு விளையாட இந்தியா மறுத்துவந்தது. 2004 இல் பாகிஸ்தான் சென்றபோது இந்திய அணி கராச்சியில் ஒருநாள் போட்டியில் மட்டுமே பங்கேற்றது. சமீபத்தில் பாகிஸ்தான் பயணம் மேற்கொண்ட இங்கிலாந்து அணி கூட ஒருநாள் போட்டியில்தான் விளையாடியது.

இந்தச் சூழலில் கராச்சியில் டெஸ்ட் விளையாட இந்திய மத்திய அரசு அனுமதியளித்துவிட்டதாக, கிரிக்கெட் சபைப் பிரதிநிதி ராஜீவ் சுக்லா நேற்று தெரிவித்தார்.

பாகிஸ்தான் தொடர் மற்றும் கராச்சியில் டெஸ்ட் விளையாட மத்திய அரசு அனுமதியளித்துள்ளது. ஆனாலும், பாதுகாப்புதொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும்படி மத்திய உள்துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

இதன்படி கிரிக்கெட் சபை, அரச அதிகாரிகள் அடங்கிய குழு கராச்சி சென்று பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்யும் என்றார் ராஜீவ் சுக்லா.

தற்போதைய அட்டவணைப்படி கப்டன் ராவிட் தலைமையிலான இந்திய அணி ஜனவரி 6 இல் பாகிஸ்தான் புறப்படும். முதலில் லாகூரில் பயிற்சிப் போட்டியில் பங்கேற்கிறது. முதல் மூன்று டெஸ்ட் முடிந்ததும் ஒரு நாள் போட்டிகள் (பெப். 6-20) தொடங்கவுள்ளது.

இதிலும் ஒரு போட்டி கராச்சியில் நடக்கவுள்ளது. ஒருநாள் போட்டிக்கான அட்டவணை இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

# பாகிஸ்தான் செல்லும் அணியில் கங்கூலியும் இடம்பெறுவார்!



மும்பை —

பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் செய்யவுள்ள இந்திய கிரிக்கெட் அணியில் கங்கூலியையும் சேர்ப்பதற்கு உயர்மட்டத்தில் முடிவுகள் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையுடனான போட்டி முடிந்ததும் அடுத்த மாதம் முதல் வாரத்தில் இந்திய அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்கிறது. முதல் டெஸ்ட் போட்டி லாகூரில் 14 ஆம் திகதி தொடங்கும். இதற்கான வீரர்கள் நாளை மறுதினம் அறிவிக்கப்படவுள்ளனர்.

இந்திய அணியில் ஒருநாள் போட்டியிலிருந்து நீக்கப்பட்டிருந்த முன்னாள் கப்டன் கங்கூலி இலங்கைக்கு எதிரான டெஸ்ட் அணியில் இடம்பெற்றிருந்தார். சென்னை, டெல்கியில் நடந்த இரு போட்டியிலும் ஆடிய அவர் அகமதாபாத் போட்டியில் நீக்கப்பட்டார்.

அவரை நீக்கியதற்கு கிரிக்கெட் சபை புதிய தலைவர் சரத் பவார்தான் காரணம் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இதனால் சரத் பவாருக்கு நெருக்கடி ஏற்பட்டது.

இந்த நிலையில் பிரச்சினையை சுமூகமான தீர்வுக்குக் கொண்டுவர மறைமுக முயற்சிகள் நடந்தன. அதனடிப்படையில் சரத் பவாரும், கங்கூலியும் நேற்றுமுன்தினம் டெல்கியில் சந்தித்துப் பேசினார்கள். ஒருமணிநேர சந்திப்புக்குப் பின் கங்கூலி வெளியே வந்தார். அப்போது அவர் உற்சாகத்துடன் காணப்பட்டார்.

நாளை மறுதினம் இந்திய வீரர்களின் பட்டியல் அறிவிக்கப்படும்போது அதில் கங்கூலி இடம்பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


ஆனால், கங்கூலி மீண்டும் வருவதை கப்டன் ராவிட், மூத்த வீரர்கள் டெண்டுல்கர், ஷேவாக், கும்ளே மற்றும் சிலர் விரும்பவில்லை என்று தெரிகிறது. கங்கூலி திரும்புவதை பயிற்சியாளர் சப்பலும் விரும்பவில்லை. எனவே சப்பலுக்கு ஆதரவுக்கரம் நீட்டும் வகையில் இந்த வீரர்களும் கங்கூலியின் வருகையை விரும்பாமல் உள்ளனர்.

தற்போதைய நிலையில் கங்கூலியை அணியில் சேர்க்காமல் இருந்தால் அது பெரும் பிரச்சினையாக வெடிக்கலாம். எனவே அவரைச் சேர்க்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. வீரர்கள் சிலர் கங்கூலியை விரும்பாததால் - அதனால் வீரர்களுக்கு இடையில் பிரச்சினை வந்துவிடக்கூடாது என்று கிரிக்கெட் சபை நினைக்கிறது.

இதற்காக எல்லா வீரர்களையும் ஒருங்கிணைத்துச் செல்லும் பக்குவம் கொண்ட முன்னாள் கிரிக்கெட் சபைத் தலைவர் ராஜ்சிங் துங்கர்பூரை அணி முகாமையாளராக நியமிக்கத் திட்டமிட்டுள்ளனர். துங்கர்பூர் - பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் சகாரியார்கானின் நெருங்கிய நண்பர் ஆவார்.

## விளையாட்டு

# இலங்கைக்கு எதிரான டெஸ்ட்: பிளெமிங் விளையாடுவாரா?



வெலிங்டன் —

இலங்கை அணிக்கு எதிராக நடைபெறவுள்ள ஒரு நாள் போட்டித் தொடரில் நியூஸிலாந்து அணி கப்டன் ஸ்ரீபன் பிளெமிங் விளையாடுவாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

உள்ளூர் போட்டிக்கான பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது - பிளெமிங்கின் இடதுகை நடுவிரலின் எலும்புப் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளது.

இந்தக் காயத்துக்குப் பின்னரும் விளையாடியிருக்கிறார். ஆனால், 24 மணி நேரத்துக்குப் பின்னர்தான் இந்தக் காயம் எலும்பில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அந்த வகையில் இலங்கைக்கு எதிராக நடைபெறவுள்ள நான்கு போட்டிகளைக்கொண்ட தொடருக்கான நியூஸிலாந்து அணி நாளை அறிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் சுனாமி ஏற்பட்டதையடுத்து நியூஸிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்த இலங்கை அணி போட்டியை நிறுத்திவிட்டு நாடு திரும்பியது. அதற்குப் பதிலாகவே நான்கு போட்டிகொண்ட தொடர் நடைபெறவுள்ளது.

அவுஸ்ரேலிய அணிக்கு எதிராக நடந்த ஒரு நாள் தொடரில் முதலிரு போட்டிகளிலும் - முகத்தில் சிறிய சத்திர சிகிச்சையைச் செய்துகொண்டதால் பிளெமிங் பங்குபற்றவில்லை.

இதனால் இவருக்குப் பதிலாக டானியல் வெட்டோரி அணிக்குக் தலைமை வகிப்பது குறிப்பிடத்தக்கது.

# யுவதி வல்லுறவுக்குட்படுத்தி கொலை: சுவிற்சர்லாந்து மக்கள் ஒன்றியம் கண்டனம்

யாழ்ப்பாணம் —

புங்குடுதீவில் யுவதியொருவர் கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை சுவிற்சர்லாந்தில் செயற்படும் புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது குறித்து அந்த ஒன்றியத்தினரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கண்டன அறிக்கையில் -

எமது தாயகத்தில் இராணுவம் கட்டவிழ்த்து விட்டிருக்கும் காட்டுமிராண்டித்தனமான அட்டூழியச் செயல்களின் வடிவில் மீண்டும் ஒரு கொடூர நாடகம் கடந்த 17 ஆம் திகதி அன்று புங்குடுதீவு மண்ணில் அரங்கேறியிருக்கிறது.

புங்குடுதீவில் ஏற்கனவே கண்ணகை அம்மன் ஆலய அருகாமையில் சாரதாம்பாளின் மீது நடைபெற்ற கொடுமையை ஒத்த வகையில் மீண்டும் மடத்துவெளி பாலசுப்பிரமணியம் ஆலய அருகாமையில் இந்த வெறித்தனம் நிகழ்த்தப்பட்டிருக்கிறது.

எத்தனை கண்டனங்கள் எழுப்பப்பட்டாலும் நீதி கிடைப்பதாக இல்லை. எமது தாயகம் விடுதலை அடையும்வரை இது போன்ற மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுக்கொண்டேதானிருக்கும். ஐ.நா.சபையின் மனித உரிமைச் சங்கம் மற்றும் அரசசார்பற்ற அமைப்புகள், கண்காணிப்புக்குழு போன்றவை பாராமுகமாக இருப்பது கேள்விக்குறியானது.

எமது மண்ணில் நடைபெற்ற இந்த கொடூரச்செயலை வன்மையாகக் கண்டிப்பதோடு, அனைத்து மனித உரிமை அமைப்புகளையும் இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாதிருக்க ஆவனசெய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

புங்குடுதீவு மண்ணில் ஈனத்தவரின் இழிசெயலுக்கு இரையாகி வீழ்ந்த எம் உறவான தர்சினி இளையதம்பிக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவிப்பதோடு அவரின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெள்ள வாய்க்கால்களை சீராக்குமாறு கோரிக்கை!

சுதுமலை —


பருத்தித்துறை, இன்பருட்டி ஜே/397, ஜே/398 ஆகிய கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பல வெள்ளவாய்க்கால்கள் சீரின்மையால் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதுடன், இடம்பெயர நேர்வதாகவும் கிராம மக்கள் குறிப்பிடுகின்றனர்.

திக்கம் சந்தி, ஆனைக்குட்டி மடத்தடி ஆகியவற்றிலுள்ள வாய்க்கால்கள் தூர்ந்துபோயுள்ளன. வேறுசில வெள்ள வாய்க்கால்கள் மோசமாகப் பாதிப்படைந்து, புனரமைக்கப்படவேண்டிய நிலையிலுள்ளன.

வெள்ள வாய்க்கால்களில் தேங்கும் கழிவுநீர், மழைநீரால் வீதிகளால் பயணிக்க முடியாத நிலையுள்ளதுடன், தமது வீடுகளுக்குள்ளும் மழைநீர், கழிவுநீர் உட்புகுவதாக கிராம மக்கள் தெரிவித்தனர்.

வெள்ளவாய்க்காலைப் புனரமைத்து, கழிவுநீர், மழைநீர் கடலுடன் கலப்பதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ளவேண்டுமென இந்தக் கிராம மக்கள் கேட்டுள்ளனர். (91)

# வடமராட்சி ஹொக்கி கழகத்துக்கு உபகரணங்கள் அன்பளிப்பு!



வடமராட்சி —

வடமராட்சியில் முதன்முறையாக சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையில் வடமராட்சி ஹொக்கி கழகத்துக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஹொக்கி உபகரணங்கள் வழங்கப்பட்டது.

சிறுவர் பாதுகாப்பு நிதிய யாழ்.மாவட்ட அபிவிருத்தி முகாமையாளர் மகேந்திரனுக்கு ஹொக்கி கழகச் செயலாளர் த.புஷ்பரட்ணம் நினைவுச்சின்னம் வழங்கினார். இந்த நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் யாழ்.மாவட்ட முகாமையாளர் திருமதி ஞானச்செல்வி காங்கேயன், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், கரவெட்டி பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் முகுந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (12)

# நல்லூர் பிரதேசத்தின் மத்தியஸ்தசபை கூட்டம்

யாழ்ப்பாணம் —

நல்லூர் பிரதேச மத்தியஸ்த சபையின் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த சபையில் பொதுவான செயற்பாடு சம்பந்தமாக பிரதேச மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலேயே கிராம மக்களிடையே இந்தக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

மக்களிடையே ஏற்படும் சாதாரண பிணக்குகளுக்கு, இணக்கப்பாட்டுடன் தீர்வு காண்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை அளிப்பதற்கு மக்களுக்கு வசதியாக ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் மத்தியஸ்தர் சபை அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பனம் விதைகள் நடுகை

சுதுமலை —

பருத்தித்துறை கற்கோவளம் புனிதநகர், வல்லிபுரம், புனிதநகர் வல்லிபுரம் கோயில் சூழல் பகுதிகளில் பனம் விதைகள் நாட்டப்பட்டு வருவதாக பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த இடங்களில் 5 லட்சம் பனம் விதைகளை நட்டு பாரிய பனை வளர்ப்புத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காகவே பனம் விதைகள் நாட்டப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

புனிதநகர் கிராமத்தில் 80 ஆயிரம் பனம் விதைகள் நாட்டப்பட்டுள்ளதுடன், ஏனைய இடங்களிலும் தொடர்ச்சியாக பனம் விதைகள் நாட்டப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (91)

# கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

கொக்குவில் —

யாழ். வண்.வடமேற்கு கேசாவில் வீதி மற்றும் நாவலடி வீதி ஆகியவற்றில் கட்டாக்காலி நாய்களால் வீதிகளில் பயணிப்போர் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதிகளில் மாலை, அதிகாலை நேரங்களில் கூட்டம் கூட்டமாக பெருந்தொகையான நாய்கள் சேர்ந்து கடிபடுவதாலும், வீதியால் செல்வோரைத் துரத்திக் கடிக்க முனைவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (206)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை மூன்று



பெயர் : தே.கோபிகா
முகவரி : நல்லூர்.

வாழ்க வளமுடன்



பெற்றோர் ஒப்பம்


# பஸ் சேவையை விஸ்தரிக்குமாறு பொற்பதி மக்கள் கோரிக்கை

சுதுமலை —

பருத்தித்துறை - பொற்பதி கிராம மக்கள் தமக்கு பஸ் சேவையைப் பெற்றுத்தருமாறு வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொதுமுகாமையாளருக்கு கடிதம் அனுப்பிள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் வீதி சீரின்மையைக் காரணம்காட்டி தமக்கான பஸ் சேவையை தடை செய்ததாகவும், வீதி புனரமைக்கப்பட்டு ஆறு மாதங்களுக்கு மேலாகியும் பஸ் சேவை தொடர்பாக எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென மக்கள் கவலை தெரிவித்தனர்.

755 பயணப் பாதையுடைய மந்திகை ஊடான பஸ்ஸையோ, 762 பணப் பாதையுடைய தும்பளை ஊடான பஸ்ஸையோ பொற்பதிக் கிராம சந்தை வரை நீடிக்குமாறு மக்கள் கேட்டுள்ளனர்.

பாடசாலை, சந்தை, அரசசார்பற்ற நிறுவனங்களுள்ள இந்தக் கிராமத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள், அரச அலுவலர்கள் என கிராம மக்கள் பலரும் நாளாந்தம் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (91)

# உடுப்பிட்டியில் விரைவில் எரிபொருள் நிரப்பு நிலையம்

சுதுமலை —

உடுப்பிட்டி கூட்டுறவுச் சங்கத்துக்கு ஆலடிப்பகுதியில் நவீன வசதிகளைக் கொண்ட எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கான விண்ணப்பத்தை பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன் சிபார்சு செய்து கொழும்பு தலைமை அலுவலகத்துக்கு அனுப்பிவைத்துள்ளார்.

கொழும்பு தலைமை அலுவலகத்தின் அனுமதி கிடைத்ததும் எரிபொருள் விற்பனை நிலைய கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆலடி - புறாப்பொறுக்கி எனும் இடத்தில் 50 இலட்சம் ரூபா செலவில் இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை அமைக்கவுள்ளதாகக் கூட்டுறவுச்சங்கத்தின் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார். (91)

# இராணுவ சம்பவங்களை கண்டித்து சாவகச்சேரியில் மறியற்போராட்டம்

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினரின் அடாவடித்தனத்தைக் கண்டித்து நேற்றுமுன்தினம் சாவகச்சேரி பஸ்நிலையம் முன்பாக மறியற்போராட்டம் நடைபெற்றது.

எழுதுமட்டுவாளில் இராணுவத்தினர் சிறுமியைக் கடத்த முற்பட்டமை, புங்குடுதீவில் கடற்படையினர் இளம் பெண்ணொருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய பின்னர் படுகொலை செய்யப்பட்டமை, பல்கலைக்கழக சமூகம் மீதான தாக்குதல் ஆகியவற்றைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுமாறு தென்மராட்சி அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அழைப்பு விடுத்திருந்தது.

இதனையடுத்து நேற்று முன்தினம் காலை பத்து மணிக்கு சாவகச்சேரி பஸ் நிலையத்தின் முன்பாகத் திரண்ட மக்கள் இராணுவத்தின் அராஜக நடவடிக்கைக்கு எதிராகக் கோஷமிட்டனர்.

சுமார் ஒரு மணி நேரம் மறியலில் ஈடுபட்ட மக்கள், பேரணியாகச்சென்று வெளிநாட்டுத் தூதரகங்களுக்கான மகஜரை தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனிடம் கையளித்தனர். (91)

# காரைநகர் அண்டசன் முன்பள்ளி நவீன வசதிகளுடன் புனரமைப்பு

சுதுமலை —

காரைநகர் அண்டசன் முன்பள்ளி பல லட்சம் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டவரின் நிதிப் பங்களிப்புடன் நடைபெற்று வரும் புனரமைப்பு இந்த மாத இறுதிக்குள் பூர்த்தியாகும் என வண. பிதா தேவதாஸ் தெரிவித்தார்.

இந்த முன்பள்ளியில் மாலை நேர கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறவுள்ளதுடன், கணனிப் பயிற்சிகளும் நடைபெறவுள்ளன.

ஊரி, பாலாவோடை கிராம மக்கள் இந்த செயற்பாடுகளால் பெரிதும் பயனடையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இக்கிராம மக்களுக்கு இலவச மருத்துவ முகாம் மாதத்தில் ஒரு தடவை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (91)

# வன்னியிலிருந்து யாழ். வருவோரை துருவித்துருவி விசாரிக்கும் படையினர்

யாழ்ப்பாணம் —

வன்னியிலிருந்து யாழ்ப்பாணம் வரும் மக்களை படையினர் துருவித்துருவி விசாரணை செய்வதாக வன்னியிலிருந்து வரும் மக்கள் விசனம் தெரிவித்தனர்.

குறிப்பாக வன்னியிலிருந்து வரும் மக்களிடம் தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்குமாறு கேட்கும் படையினர், அடையாள அட்டையில் வன்னி பிரதேச பதிவு இருந்தால் - அவர்களை என்ன காரணத்துக்காக யாழ்ப்பாணம் வந்தீர்கள் என துருவித்துருவி கேட்பதாகவும் யாழ்ப்பாணத்தில் தங்கும் முகவரியைக் கேட்பதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன் படையினரின் இந்த சோதனை நடவடிக்கைகள் காரணமாக வன்னியிலிருந்து உறவினரைப் பார்க்கவும் மற்றும் பல்வேறு தேவைகளுக்காகவும் இங்கு வருவோர் மிகவும் அச்சமடைந்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக குடாநாட்டில் இடம்பெறும் தாக்குதல் சம்பவங்களைத் தொடர்ந்து படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளை முடுக்கிவிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## இது பற்றிச் சிந்திப்போம்...!

அறியாத பாதையில் அடியெடுத்து வைக்கும் கால்கள் முள்ளுக்கும், கல்லுக்கும் தயாராக இருக்க வேண்டும். வலிகளைத் தாங்கி வந்தடைந்துவிடின் வந்தடைந்த அனுபவங்கள் மீண்டுமொரு வலிகளை உருவாக்காது.



# வடக்கு கிழக்கு "பேண்தகு அபிவிருத்திக்கு" பொருத்தமான தந்திரோபாயங்கள்

பொருளியல் துறைப் பேராசிரியர் வி.நித்தியானந்தனுடனான ஓர் நேர்காணல்...

செவ்வி கண்டவர்: ஆசிரியர் ஆர்.கே.மேனன்

◆"பேண்தகு அபிவிருத்தி" என்ற சொற்பதமானது வடக்கு-கிழக்கினைப் பொறுத்தவரையில் எத்தகைய பரப்பினை உள்ளடக்கியுள்ளது.

இது ஓர் பாரிய பரப்பளவினை உள்ளடக்கிய பெரும் பகுதியாகும். தனியே உற்பத்தியைக் கூட்டி வருமானத்தையும், வேலை வாய்ப்பையும் அதிகரித்தலை அபிவிருத்தியெனக் கூறமுடியாது. அபிவிருத்தி என்பதற்குள் வளர்ச்சி என்பதும் உள்ளடங்கியுள்ளது.

ஆனால், அதற்கும் மேலாக சமூக அம்சங்களையும், பண்பாட்டு அம்சங்களையும், விழுமியங்களையும், அபிவிருத்தி கொண்டு இருக்கும் போது, தான் சமூக மேம்பாடு (Social Promotion) அல்லது சமூக முன்னேற்றம் நிச்சயமாக ஏற்படும் என்று கூறலாம்.

◆ஏனைய நாடுகளின் அபிவிருத்திப் போக்கோடு ஒப்பிடும் போது, வடக்கு - கிழக்கில் அபிவிருத்திக்கான கீழ்க்கட்டுமானங்கள் சிதைக்கப்பட்ட நிலையில் உள்ளது. இந்த நிலையில் அபிவிருத்திக்கான தந்திரோபாயங்கள் என்று எதை நீங்கள் கருதுகிறீர்கள்?

வடக்கு - கிழக்கினைப் பொறுத்த வரையில் பேண்தகு அபிவிருத்திக்கான தந்திரோபாயத்தினை வகுப்பதில் தமிழர்கள் வாய்ப்பான நிலையில் இருக்கின்றார்கள். இது ஓர் முக்கியமான அம்சமாகும். கைத்தொழில் புரட்சிக்காலத்தில் இங்கிலாந்து மிக ஆரம்ப நிலையில் இருந்தது. அதாவது, விவசாய சமூகத்திலிருந்து கைத்தொழில் சமூகத்துக்குச் சென்ற போது வளர்ச்சி, உற்பத்தி என்பன பெருகிக் கொண்டிருக்க, அத்துடன் இணைந்த வகையிலேயே அவர்களது பண்பாட்டு சீர்திறன்கள், சமூக விழுமியங்கள் என்பனவெல்லாம் எவ்வாறு கைகோர்த்துக் கொண்டு சென்றனவோ அதே நிலையை நாங்களும் எய்தக்கூடிய வாய்ப்பான சூழல் வடக்கு-கிழக்கில் எங்களுக்குக் கிடைத்துள்ளது. இங்கிலாந்திலும் ஆங்கில மக்கள் ஒரு வெறுமை நிலையிலேயேதான் தொடங்கினார்கள்.

நாங்கள் இன்னும் சற்றுமாறுபட்ட வெறுமை நிலையிலே இருக்கின்றோம். எங்களுடைய இனத்துவப் போர் காரணமாகவும், எமது இனத்தின் மீது திணிக்கப்பட்ட பேரழிவாலும் எங்களுடைய கீழ்க் கட்டுமானம் என்று கூறக்கூடிய அனைத்தும் கிட்டத்தட்ட முற்றாக சிதைக்கப்பட்ட நிலையைக் கடந்த இருபது வருடங்களாக அனுபவித்து வருகிறோம். இவ்வாறான ஒரு வெறுமை நிலையில் இருக்கின்ற போது நாங்களும் இந்த வளர்ச்சியையும், அபிவிருத்தியையும், சமூக மேம்பாடுகளையும் ஒன்று சேரத் தொடங்குகின்ற தந்திரோபாயத்தை பின்பற்ற முடியும்.

அதுதான் எமது அடிப்படையான தந்திரோபாயமாக இருக்க வேண்டும்.

◆அண்மையில் சிமெந்து தொழிற்சாலையினை காங் கேசன்துறையில் மீள இயங்க வைக்கப்போவதாகச் செய்திகள் வெளிவந்தன. இவ்வாறாக முன்பிருந்த நிலைபடிப் படியாக மீண்டும் திரும்பும் பட்சத்தில் பேண்தகு அபிவிருத்தி பரவலாக இடம்பெறுமென தாங்கள் நம்புகிறீர்களா?

அண்மையில் சிமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் வந்து சென்றுள்ளார் என்பதையும், யாழ் குடாநாட்டை அல்லது வடக்கை முன்பிருந்த பழைய நிலைக்குக் கொண்டு வருவது தான் அரசாங்கத்தின் முக்கிய நோக்கமெனவும், இதில் ஜனாதிபதி கூடிய அக்கறை உள்ளவராக இருக்கின்றார் என்றும் அவர் கூறியிருந்தார் என பத்திரிகை செய்திகள் தெரிவித்தன.

உண்மையில் அது எங்களுக்குத் தேவையற்ற ஒன்று. முன்பிருந்த நிலைக்குத்தான் போவது என்றால், நாங்கள் இவ்வளவு கஷ்டப்பட்டு எல்லாவற்றையும் சிதைத்து இழந்திருக்க வேண்டியதில்லை. அவ்வாறு பழைய நிலைக்குச் சென்றால் வடக்கு - கிழக்கில் ஒரு சில இடங்களில் மாத்திரமே வளர்ச்சி இருக்கும். ஆனால், ஒரு பேண்தகு அபிவிருத்தி முற்றிலும் இல்லாத நிலை, சமூக முன்னேற்றமில்லாத நிலை என்பனவே மீண்டும் நிகழும். 1977 அல்லது 1980 ஆம் ஆண்டு நிலையில் ஈழத்துத் தமிழர் சமூகம் வடக்கு - கிழக்கில் எவ்வாறு இருந்தது என்பதை அறிகின்றபோது "அச்சமூகம் அபிவிருத்தியின்பாற்பட்ட சமூகமாக நிச்சயமாக கொள்ள முடியுமா" என்ற கேள்வி எழுகின்றது. அது உண்மையில் ஒரு அபிவிருத்தியை நோக்கிய சமூகமாக நிச்சயம் இருக்கவில்லை.

ஓரளவு உற்பத்தி இடம் பெற்றிருந்தாலும், வருமானத்தைப் பெருக்குவதற்கு நாட்டைவிட்டு ஓட வேண்டியதாயிற்று. வளங்கள் இங்கே பூரணமான பயன்பாட்டில் இல்லை. எமது சமூகத்தை எடுத்தால் சாதிப் பாகுபாட்டு முறைமைகள், சீதனமுறை இவையெல்லாம் மலிந்து கிடக்கின்றன. இவையெல்லாம் இருக்கின்ற நிலைமையை உண்மையில் நாங்கள் அபிவிருத்தி நோக்கிய நிலையென்று ஏற்க முடியுமா? பொருளியல் ரீதியாக ஆம் என்று பதில் சொல்ல முடியாது? இவ்வாறான நிலையில் மீண்டும் அதே பழைய நிலைமைக்குச் செல்வதை நிராகரிக்க வேண்டும். அவ்வாறு பழைய நிலைக்குச் செல்வதற்கு இவ்வளவு கஷ்டப்பட்டிருக்கத் தேவையில்லை.

◆வடக்கு-கிழக்கைப் பொறுத்த வரையில் இலங்கையின் ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடமுடியாத வேறுபாடு அனைத்து விடயங்களிலும் உள்ளது. இவ்வேறுபாடு அபிவிருத்தியில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தும்?

புவியியல் ரீதியாக இலங்கைத் தீவுக்குள் வடக்கு-கிழக்கு அடங்குகின்றது என்ற அணுகுமுறை இருப்பினும், வடக்கு - கிழக்குப் பகுதிக்கும் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கும் இடையில் தரைத் தோற்றம், பௌதிக வளங்கள் என்பவற்றின் அடிப்படையிலும், மக்களுடைய பண்பாட்டு கலாசார அம்சங்கள், நடையுடை பாவனை, மொழி முதலிய வற்றின் அடிப்படையிலும் பாரிய வேறுபாடுகளும் ஒத்திசைவற்ற தன்மைகளும் காணப்படுகின்றன.

"இலங்கைத் தேசிய வாதம் என்பதன் ஒரு பகுதியாக வடக்கு - கிழக்கு இருக்க வேண்டும்" என்று கூறுகின்ற போது, வடக்கு- கிழக்கின் வேறுபாடுகளும் ஒத்திசைவற்ற தன்மைகளுமே பிரச்சினையாக இருந்து வந்துள்ளது. இவ்வாறான வரையறைக்குள் வேறுபாடுகள் இருந்த நிலையிலும் இலங்கைத் தேசிய இனவாதம் என்ற நிலைப்பாட்டை வலியுறுத்துவதில் வெற்றி கண்டிருக்கமுடியும். எப்படியென்றால் இலங்கையை ஆட்சி செய்த அரசாங்கங்கள், அதற்குரிய வகையில் அபிவிருத்திக் கொள்கைகளை பேணுவதற்கு முயன்றிருந்தால், இந்த வேறுபாடுகளைக் கடந்து சீரான, சமுகமான ஒற்றுமையான இலங்கைப் பொருளாதார சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்பியிருந்திருக்க முடியும். புவியியல் ரீதியான வேறுபாடுகள் இலங்கைக்கு மட்டும் உரியனவல்ல. உலகின் பல நாடுகளிலும் புவியியல் ரீதியான வேறுபாடுகள் உள்ளன. அவற்றை கருத்தில் எடுத்த முறையில் அபிவிருத்தித் திட்டங்களைத் தீட்டுவதோ, முன்னெடுத்துக் கொண்டு செல்வதோ அநேக நாடுகளுக்குள் பாரிய சவால்களாக இருந்திருக்கவில்லை என்றே கூறலாம். (தொடரும்)





## 2006 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டமும் வடக்கு - கிழக்குப் பகுதியில் அதன் விளைவுகளும்

ஒரு நாட்டினுடைய வருமான செலவின் செயற்பாடுகளைத் திட்டமிட்டுப் பொருளாதார நிலைக்கு ஏற்ப எதிர்வரும் வருடத்துக்காக நிதியமைச்சால் தயாரிக்கப்பட்ட நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் ஒரு அறிக்கையே வரவு - செலவுத் திட்டம் என்று கூறிக்கொள்ளப்படும். இது ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதமளவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு, பெரும்பான்மை அடிப்படையில் பாதீட்டை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு.

இதேபோன்றுதான் கடந்தவாரமும் (08.11.2005)நாடாளுமன்றத்தில் பாதீடானது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், இது ஒரு பிரசாரச் செயற்பாடாக அமைந்துள்ளது என்று எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது. ஆனால், இது ஒரு வெளிப்படையான பார்வைக்கு சாதாரண பாதீடு போன்றே காணப்படுகிறது.

அரச ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு, சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான ஒரு செயற்திட்டம் வட-கிழக்கைப் பொறுத்தவரை ஒரு பால் தொழிற்சாலை என்று மிகச் சாதாரணமாக பாதீடு போன்றே காணப்படுகின்றபோதும், இது ஒரு முன்நோக்கு அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், தற்போதைய ஆட்சியாளர்கள் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றால், பாதீட்டில் கூறப்பட்டுள்ள அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும் என்ற கருத்து கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

வழமையாகச் சமர்ப்பிக்கப்படும் பாதீட்டில் இருந்து இது சற்று மாறுபட்டே காணப்படுகின்றது. ஏனெனில், வழமையாக பாதீட்டின் பாதுகாப்புச் செலவினமே முக்கியத்துவம் பெற்றுக் காணப்படும். ஆனால், இங்கு அதற்கான முக்கியத்துவம் கொடுக்கப்படாமை ஒரு வேளை தேர்தல் பிரசார உத்தியாகக் காணப்பட்டிருக்கலாம். ஆனால் ஏற்படப்போகும் பாதுகாப்புச் செலவினம் எவ்வாறு நிவர்த்திசெய்யப்படும் என்பது ஒரு பிரச்சினையே.

இதுவரை 2006 ஆம் ஆண்டுக்கான பொதுவான ஒரு பார்வையே ஆகும். ஆனால், தமிழர்களைப்பொறுத்தவரை பாதீடானது - பொதுவாக சம்பளவுயர்வு மற்றும் சில நன்மைகளுமே பெறக்கூடிய ஒரு வழியே ஆகும் என்பது ஒரு பொதுவான கருத்தாகும். ஏனெனில், வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றதும், ஒரேயொரு கேள்விதான் - அரச மற்றும் அரசசார்பற்ற ஊழியர்களுக்கு எவ்வளவு சம்பள உயர்வு வழங் கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் நாம் பார்க்கும்போது ஒரு பொதுவான கருத்துக்கு வரமுடியும். அதாவது - தமிழர்களைப் பொறுத்தவரை குறிப்பாக வடக்கு - கிழக்குத் தமிழர்களைப் பொறுத்தவரை சம்பள உயர்வே அவர்களுக்குக் கிடைக்கும் நேரடி நன்மையாக உள்ளது.

மாறாக அவர்கள் பாதீட்டின் ஊடாக அறவிடப்படும் கட்டணங்களைச் செலுத்தவேண்டியவர்களாகவே காணப்படுகின்றனர். இதற்கு அடிப்படைக் காரணமாக அமைவது சேவையையோ/பொருளையோ வழங்குபவர்கள் தமது தலைமை அலுவலகத்தை கொழும்பில் கொண்டிருப்பதேயாகும். இதனால் இங்கு வேலை செய்பவருடைய வருமான வரியை கம்பனி சம்பளத்தில் இருந்து கழித்துக்கொண்டு மீதியையே வழங்குகின்றது.

இன்றிலிருந்து 15 - 20 ஆண்டுகளுக்கு முன்பிருந்த பொருளாதார முறையை நோக்குவோமாயின் - யாழ்ப்பாணம் என்றதும் - புகையிலையும், வெங்காயமும், மன்னார் கருவாடும் என்று பொருட்களுக்கு நமது பிரதேச நிலங்கள் சிறப்புப் பெற்றுக் காணப்பட்டன. ஆனால், இன்று அப்படி அல்ல. சில குறிப்பிடப்பட்ட அளவு பொருட்களையே எமது நிலம் உற்பத்தி செய்கிறது. அதற்கு ஏகப்பட்ட காரணங்கள் இருக்கலாம். ஆனால், அடிப்படைப் பொருளாதார வளமானது வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரை பாதிப்புக்குள்ளாகியே உள்ளது.

அதேநேரம் நாம் தெற்கில் இருந்து வரும் பொருட்கள் மீது அதிக கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளோம். இதற்குப் பல காரணங்கள் அடிப்படையாக அமைந்திருக்கலாம்.

1. உள்ளீட்டுப் பொருட்களின் விலைகள் அதிகமாக உயர்ந்துள்ளது.
2. வளமான கடல் மற்றும் நில வளம் பாதுகாப்புக் காரணம் காட்டி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை.
3. சரியான சந்தை வாய்ப்பின்மை.
4. உட்கட்டமைப்பு வசதிகள் இன்மை/ போதாது.


என்று கூறிக்கொண்டே போகலாம். ஆனால், பொதுவாக ஒரு மனிதன் தன் சுயஉழைப்பில் வாழ்வது போன்றே பொருளாதாரத்தில் தன் சொந்த வளத்தைப் பயன்படுத்துவது அவசியமாகும்.

2006 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளதுபோன்று கிளிநொச்சியிலோ அல்லது வடக்கு பிர தேசத்திலோ பால் தொழிற்சாலை அமைக்கப்படுமா என்பது சந்தேகமே. ஏனெனில், இனி வடக்கு - கிழக்குப் பிரதேச அபிவிருத்தியானது - சமாதானச் செயற்பாடுகளிலேயே பெரிதும் தங்கியுள்ளது.

இப்படியான ஓர் சந்தர்ப்பத்திலேயே இப்போது தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டுள்ளனர். எனவே, 2006 ஆம் ஆண்டு பாதீட்டைவிட சமாதான முயற்சியே முக்கியத்துவம் பெற்றுள்ளது. சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டில் வழமைபோல பாதுகாப்புச் செலவு அதிகரிக்காதபோதும் யுத்தச் செயற்பாடு மேற்கொள்ளப்படாது என்று கூறமுடியாது என்பதே உண்மையாகும்.

2006 ஆம் ஆண்டுப் பாதீட்டால் மட்டுமல்ல எல்லாத் திட்டங்களும் தமிழர்களுக்கு உச்சமாகப் பயன்படவேண்டுமாயின், சமாதானச் செயற்பாட்டினூடாக ஒரு அமைதியான வணிகச் சூழல் அவசியமாகும் என்பதுவே உண்மையாகும். எனவே, நிதி உதவி செய்யும் நாடுகள், வங்கிகள், நிறுவனங்கள் அவசியமாக தாம் செய்ய வேண்டியதாக வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் ஒரு அமைதிச் சூழலை ஏற்படுத்திப் பொருளாதாரச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். இதனூடாக தமிழர்களிடம் இந்தச் செயற்திட்டம் உரிய பயனை அளிக்கும் என்பது உண்மையாகும். இல்லாவிடின் இந்தப் பிரதேச வளச் சுரண்டலாக அமைந்துவிடும் என்பதுவே உண்மை நிலையாகும்.

- வணிகன்




# வடக்கு - கிழக்கில் கால் நடை அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் வறுமை ஒழிப்பு



இரு தசாப்த காலங்களாக நடந்துவரும் போர் எமது பிரதேசத்தில் வாழ்க்கைத்தரத்தினை அழித்தும், அபிவிருத்தி வளர்ச்சியைக் குறைத்தும், பலரை உடல் உளத்தாக்கத்துக்கும் உள்ளாக்கியுள்ளது. இது உலக வங்கியின் 2000 ஆம் ஆண்டுக் கணிப்பின்படி வடக்கு - கிழக்கில் வறுமை 20-25% என எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆரம்பத் தகவல்களின்படி இதன் அதிகரித்த எல்லை ஊவா மாகாணத்தை ஒத்தது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (தெற்கில் அதிகரித்த வறுமை காணப்படும் பிரதேசம்).

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைமுறைக்கு வந்த அமைதிப் பேச்சு வார்த்தைக்கு பின்னரும், ஏ-9 பாதை திறப்பின் பின்னரும் அனைவரினதும் கவனம் நம் மண்ணின் அபிவிருத்தியினை நோக்கித் திரும்பியுள்ளது. இக்கட்



டுரை வறுமை ஒழிப்பில் கால் நடைகளின் பங்கு பற்றி ஆராய்கிறது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் கால்நடை, கால் நடை உற்பத்திப் பொருட்களுக்கான தேவை 20 வருடங்களில் 2 மடங்காகும் என எதிர்பாக்கப்படுகின்றது. (டெல்கனடா 1991) இது மற்றைய விவசாயத் தேவைகளின் வளர்ச்சியைவிட அதிகரித்ததாயும் உலக விவசாய உற்பத்தியில் அரைவாசியை நிரப்பும் எனவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது (கால் நடைப் புரட்சி எனப்பெயரிடப்பட்டுள்ளது). எனவே, விவசாயத்தினூடான வறுமை ஒழிப்புத் திட்டங்களில் விலங்கு விவசாயம் அல்லது கால்நடையின் பங்கு அவசியமாகின்றது.

### வறுமை ஒழிப்பில் கால் நடையின் பங்கு

கால்நடை மனிதத் தேவைக்கான புரதங்களை மட்டுமன்றி, தாவர உற்பத்திக்கான பசளையினையும் வழங்குகின்றது. ஒரு ஹெக்ரயரில் பயிரிடப்படும் விவசாய உற்பத்தியினைவிட, கால்நடை உற்பத்தியின் பெறுமதி அதிகமாக இருப்பது அண்மைக்காலத் தகவல்களின் படி ஊர்ஜிதப்படுத்தப்படுகின்றது. கால்நடையூடான கிராமியப் பொருளாதாரம் அதிகளவு மேம்படுத்தப்படாவிடினும், ஒரு கிராமத்தவனின் குடும்ப நாளாந்த வருமானத்தில் கால் நடையின் பங்கு பெரியதே.

வறுமை ஒழிப்புத்திட்டங்களில் - ஊர்க்கோழிகள், ஆடு (ஏழையின் பசு), உள்ளூர் பன்றிகளின் பங்கு முக்கியமானதொன்றாகும். நகரங்களில் அதிகரித்துவரும் மக்கள் தொகை, பெருவாரியான சட்டதிட்டங்கள் என்பன விலங்குப் பொருட்களுக்கான தேவையையும் அதிகரித்துச் செல்கின்றது. இவ்வாறான தேவையை நிறைவு செய்வதற்குக் குறைந்த விலையில் உற்பத்தி செய்யப்படும் தாவரங்கள்- உணவாக விலங்குகளுக்கும், அதனூடாக மனிதன், சூழல் சமூகப் பிரச்சனைகளிற்கும் பெரும் சவாலாக அமைந்துள்ளமையும் மறுக்கப்பட முடியாத ஓர் உண்மையாகும்.

சிறு பண்ணை விவசாயிகளுக்கான உரிமைகள் - பல இடங்களில் மறுக்கப்படுவதும் கசப்பான உண்மையாகும். சமூகத்தில் நிலையான பேண்தகு அபிவிருத்தியினை முன்னெடுக்கையில் கிராம மட்டங்களின் கொள்கைகள் கவனமாக அமுல்படுத்தப்பட வேண்டிய கட்டாயமும் சம்மந்தப்பட்டவர்களைச் சாரும்.

### கோழி வளர்ப்பின் வருமானத்தை அதிகரிப்பதற்கான இருவழிகள்

1. பாரம்பரிய கொல்லைப்புற கோழி வளர்ப்பை அபிவிருத்தியடையச் செய்தல்.

2. இடைத்தர செறிந்த வளர்ப்பை ஊக்குவித்தல்.

அண்மைக்காலப் பரிசோதனை முடிவுகளின்படி, கொல்லைப்புறக் கோழி வளர்ப்பினுடைய உற்பத்தி அதிகரிப்பு பெருமளவில் உள்ளது அவதானிக்கப்பட்டுள்ளது. குஞ்சு பொரிக்கும் திறனை அதிகரித்தல், இறப்பு வீதத்தை 25% குறைத்தல், உண்ணலுக்கான முட்டை வளர்ப்பினை 25% அதிகரித்தல், நோய்த்தடுப்பு, பண்ணையாளரின் கொள்ளளவை அதிகரித்தாலும் ஏற்படுத்தப்படும் தொழில் நுட்பவிருத்தியாலும் மூன்று அதிகரிப்பையும் பேணக் கூடியதாக உள்ளது.

இரண்டாவதாக இடைத்தர பண்ணை வளர்ப்பு. இது முதலீடு நடைமுறைச் செலவு உள்ளடக்கியுள்ளது. இதனைப் பலர் ஒன்று சேர்ந்து கூட்டுறவு பண்ணைகளை அமைப்பதினூடாக கிராமங்களில் செயற்படுத்தலாம். இங்கு கூட்டுறவு முயற்சியும், நம்பிக்கையும் ஊன்று கோலாகின்றது.

### ஆடு வளர்ப்பின் மூலம் வருமானத்தினை அதிகரித்தல்

ஏழைகளின் பசு என ஆடு வர்ணிக்கப்படுகின்றது. ஆடு வளர்ப்போரிடையே - ஆடு மூலம் பெறப்படும் பொருட்களின் சந்தை விலையினை அறியச்செய்தல், உற்பத்தியாளர் ஊடான சந்தை வாய்ப்பை அதிகரிக்கச் செய்தல், சில குழுக்களாக வகுத்து அவர்களுக்கு நிறுத்தல் அளவைகளை வழங்கல், அவர்களுக்கான தொழில் நுட்பப் பயிற்சிகளை வழங்கல் என்பன இதற்கான சிறந்த தீர்வுகளாகும்.

இந்த அனைத்துச் செயற்பாட்டுக்கும் சிறுகடன் திட்டங்களின் தேவையும் அவசியம். பலர் தமக்குள்ளே இணைவதன் மூலமும், நாளாந்த சிறு சேமிப்பின் மூலமும் இத் தேவையை இலகுவாக அடையக்கூடியதாக இருக்கும். அதேவேளை அதிகரித்து வரும் விவசாயக்கடன் வசதிகளும், அரச, அரசசார்பற்ற கடன் திட்டங்களும் கிராம மட்டத்திலும், விவசாயிகளிடையேயும் தெளிவாக ஊடகங்களினூடாகவும் உரைக்கப்பட வேண்டியது அந்நிறுவனங்களின் கடமையாகும். இவ்வாறு எம் நாட்டின் வறுமையை பலகரங்கள் இணைந்து விரட்டியடிக்கலாம். விரட்டியடிப்போம் இனிவரும் காலங்களில்.

ஆக்கம்:- எஸ்.சுமதி
விரிவுரையாளர்
விவசாயபீடம்.

நன்றி - பசுந்தோகை

# போராட்ட சூழலால் தமிழர்களுக்குண்டான வேலையில்லாப் பிரச்சினையும், கீழ் உழைப்பும்

ஒரு நாட்டின் பொருளாதார நிலையை அறிவதற்கு அந்த நாட்டினுடைய வேலைவாய்ப்பு நிலையும் முக்கியமானதாகிறது. ஏனெனில், சமூக பொருளாதார நிலை என்று நாம் கருதுகின்ற போது அதனுள் வேலைவாய்ப்பு அல்லது வேலையின்மைநிலைமை என்பனவும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நிலைமையையே வகிக்கின்றன.

வேலையின்மையினுள் காணப்படும் கீழ் உழைப்பு என்பது உண்மையில் தமிழ்மக்களிடையே பரந்தே காணப்படுகின்றது எனலாம். இதனைப் பார்ப்பதற்கு முன் கீழ் உழைப்பு நிலை என்றால் என்ன என்று பார்ப்போம்.

கீழ் உழைப்பு என்பது ஒருவர் படித்த படிப்பிற்கு தகுந்த வேலை கிடைக்காமை, பருவகால வேலை இல்லாமை, வேலைக்கு ஏற்ற ஊதியம் கிடைக்காமை என்பன வற்றைக் கூறலாம்.

இப்படியான கீழ் உழைப்பு நிலைமை தமிழ்மக்களிடம் பொருளாதாரத்தில் பரந்து காணப்படுவதற்கு முக்கிய காரணமாக அமைவது நம் நாட்டில் நிலவியதும், நிலவுவதுமான யுத்த நிலைமையே காரணம் என்று பொதுவாக நோக்கும்போதும், அதனை மையமாக வைத்து பல காரணிகள் உருவாக்கப்பட்டமையே காரணமாக அமைந்துள்ளது எனலாம்.

முதலாவதாக பாரிய முதலீட்டுத் திட்டங்கள் வடக்கு - கிழக்கு பகுதியில் உருவாக்கப்படாமையே காரணமாக அமைந்துள்ளது. இதன் காரணமாக வேலைவாய்ப்பு நிலைபாரிய ஒருபிரச்சினையாக உருவெடுத்தது. அதுமட்டுமல்ல, வடக்கு- கிழக்குப் பிரதேசத்தில் பாரிய தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டிருந்தமையும், யுத்தத்தைக் காரணங்காட்டி மூடப்பட்டமையும், இவற்றினால் வளர்ச்சியடைந்துவரும் வேலைவாய்ப்பு பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தியதும் எனலாம்.

இரண்டாவதாகத் தமிழர்களின் பொருளாதார வளம் யுத்தத்தை காட்டி சீரழிக்கப்பட்டது அல்லது சீரழிக்கப்படுகிறது எனலாம். ஏனெனில், வளமான கடல்வளம், வளமான மண்வளம் மற்றும் துறைமுகங்கள், சுற்றுலாத்தளங்கள் என்பன யுத்த த்தை காரணம் காட்டி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இவற்றினால் தொழில் செய்ய முடியாத நிலை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது எனலாம்.

சுயதொழிலில் அதிக நாட்டமுடையவரான தமிழர்கள் தமது சுயதொழிலை யுத்தத்தின் மத்தியில் மேற்கொண்டனர். இந்த முடிவு அவர்களை நட்டமடைய வைத்தது என்றால் அதனை மறுக்கமுடியாது. ஏனெனில், சுயதொழிலுக்கு அமைதியான வணிகச்சூழல் அவசியமானதாகவே காணப்படுகிறது. இந்த நிலையில் வட-கிழக்குப் பகுதியில் ஓர் அமைதியற்ற சூழல் காணப்பட்டது என்பது யாராலும் மறுக்க முடியாது. இதனால் பலர் நட்டமடைய வேண்டியேற்பட்டது.

போதிய அளவு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளானது வடக்கு-கிழக்குப் பகுதியில் ஏற்படுத்தப்படவில்லை என்றே கூறலாம். உதாரண மாக சுயதொழிலுக்குத் தடையாக இருப்பது நிதிப்பிரச்சினையாகும். இவ்வாறான நிதியைக்கூடப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள் வட- கிழக்கில் பல தடைகளுக்கு மத்தியில் காணப்பட்டுள்ளன.

உட்கட்டமைப்பு வசதிகளானது, திருப்தி தருமளவுக்குப் போதுமானதாகக் காணப்படவில்லை எனலாம். உதாரணமாக தொலைத்தொடர்பு, மின்சாரம் என்ற முக்கியமான உட்கட்டமைப்பு வசதிகளைக் குறிப்பிடலாம்.

இப்படியான சூழ்நிலையில் வட- கிழக்குச் சமூகம் வேலைவாய்ப்பைத் தொழில்தருநரிடம் எதிர்பார்த்தனர். இந்த நிலைமைகளால் நாட்டில் பாரிய பொருளாதாரச் சமமின்மை யுத்தத்தைக் காரணம்காட்டி உருவாக்கப்பட்டுள்ள நிலையில், வேலைவாய்ப்பு குறைவாகவும், வேலைவாய்ப்பு எதிர்பார்ப்போர் அதிகளவிலும் உள்ளதால் அடிப்படைத் தகுதிக்கு மேற்பட்டோரும் குறைந்த சம்பளத்துக்கு வேலைதேடும் துர்ப்பாக்கிய நிலை எமது சூழலில் உருவாக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக நாம் வாழும் யாழ். குடாநாட்டில் ஒரு வேலைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. கணக்கியல் உதவியாளர் என்று வைத்துக்கொள்வோம். தகைமையாக க.பொ.த உயர்தர வர்த்தகப் பிரிவில் சித்தி என வைத்துக் கொள்வோம். இதற்கு பட்டதாரியும் செல்கின்றார். இதனால் பட்டதாரியே தெரிவுசெய்யப்பட்டால் இங்கு இவர் கற்ற கல்விக்குரிய வேலைவாய்ப்பு கிடைக்கவில்லையாயின் அதுவே கீழ் உழைப்பு என்கின்றோம்.

சில நிறுவனங்களில் திறமையுடன் சம்பள அளவும், வேலைவாய்ப்பைத் தீர்மானிப்பதாக அமைந்துள்ளது. இங்கு இவர் செய்யும் வேலைக்கு உரிய சம்பளம் கிடைக்காவிடின், அதனையே கீழ் உழைப்பு நிலை என்கின்றோம்.

இதேபோன்றுதான் நம்மவர்கள் வெளிநாடு சென்று அங்கு அந்த நாட்டு குடியுரிமை கிடைக்க முன்னர், பார்க்கும் பல வேலைகளும் இவ்வாறான கீழ் உழைப்பு நிலையிலேயே காணப்படுகிறது. இதனால் நம்மவர்கள் பலர் இந்த நாட்டுக்காக தமது உழைப்பு மூலம் அதிக வருவாய் பெற்றுக் கொடுப்பவர்களாகக் காணப்படுகின்றனர்.

இப்படிப்பட்ட கீழ் உழைப்பு நிலையானது, ஒரு நாட்டினுடைய சமூக பொருளாதாரத்துக்கு பொருத்த மற்றதாகவே காணப்படுகிறது. ஆனால், இது தமிழ்மக்களிடம் மிக பாரிய ஒரு பொருளாதார விளைவு என்று புரியாது இணைந்துள்ளது. இதனை நிறுத்தவேண்டியது அவசியமாகும்.

கீழ் உழைப்பு நிலையை நமது பொருளாதாரத்திலிருந்து நீக்க வேண் டியதற்குப் போதுமான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படவேண்டியது அவசியமாகியுள்ளது. இவ்வாறு உரு வாக்குவதற்கு சுயதொழில் முயற்சி கள் ஊக்குவிக்கவேண்டியது அவசியமாகியுள்ளது.

இதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை வங்கி, வீதி, தொடர்பாடல், மின்சாரம், அபிவிருத்தி செய்துகொடுப்பது அவசியமாகியுள்ளது.

இனியும் தமிழர்கள் கீழ் உழைப்பு நிலையில் வாழ்வது தமது பொருளாதாரத்துக்குக் கேடு என உணர்ந்து முன்னேறுவது அவசியமாகியுள்ளது.

இதனை உணர்ந்து தமது தொழில், சம்பளம் மற்றும் தொழில் சம்பந்தமான அனைத்து விடயங்களையும் கவனித்து செயற்படுவது அவசியமாகியதுடன், வெளிநாடு சென்று இப்படிப்பட்ட கீழ் உழைப்பை தவிர்ப்பதும் நம் தேசத்துக்கு அவசியமாகியுள்ளது.

இதற்கு உதாரணமாக 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணப்பட்ட மத்திய கிழக்கு தொழில் வாய்ப்பு ஒரு கீழ் உழைப்பு நிலை போன்றே காணப் பட்டது அது இன்று குறைவடைந்து விட்டது எனலாம்.

- உ.பிரசன்னன்

# மக்கள் போராட்டத்தில் இணைந்து போராட நாம் தயாராகவுள்ளோம்

## கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம்

கிளிநொச்சி

தமிழ் பேசும் மக்களின் இயல்பு வாழ்வை சிதைத்து அண்மை நாட்களாக இராணுவத்தினர் பல்வேறு அடாவடித்தனங் களை அவர்கள் மீது பிரயோ கித்து வருகின்றது.

இத்தகைய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் தமிழ்த் தேசம் மீது போர் தொடுப்பதற்கான அரசினுடைய முன் முயற்சிகள் என எண்ணத் தோன்றுகின்றது என - கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றி யம் வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும்- புங்குடுதீவில் இளம் யுவதி கடற்படையினரால் கொலை செய்யப்பட்டுள்ளார். இத்த கைய கொலை வெறியாட்டத்தை கண்டித்து அகிம்சை ரீதியில், அமைதி வழியில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மக ஜர் சமர்ப்பிக்கச் சென்ற தமிழ் பேசும் உயர்கல்விச் சமூகத்தின ரான துணைவேந்தர், பேராசிரி யர்கள், விரிவுரையாளர்கள் சிங்கள இராணுவத்தின் காடைத் தனமான தாக்குதலுக்குள்ளாகி பலத்த தடியடிக்கும், துப்பாக்கி சூட்டுக்கும் இலக்காகி உள்ளனர்.

அடாவடித் தனங்களால் மக் கள் விரக்தியும், ஏமாற்றமும் அடைந்துள்ளனர். சமாதான முன்னெடுப்புக்களின் மீது இருந்த அற்ப நம்பிக்கையும் இல்லாது போயுள்ளது.

இதனால் சர்வதேச சமூகம் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து வருகின்றனர். தமிழ் மக் கள் தங்களை தற்காத்துக் கொள்ள எடுக்கும் எத்தகைய மக்கள் போராட்டத்துடனும் இணைந்து போராட நாம் தயா ராகவுள்ளோம் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

## கணினி பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கல்

கிளிநொச்சி

ஏசியன் கல்வி நிறுவனத்தின் ஆதரவுடன் தமிழர் புனர்வழ்வுக் கழகத்தின் கணினியற் கல்லூரியினால் நடைமுறைப்படுத்தப்படும் கணினிப் பயிறசியினை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றி தழ் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை காலை 10.30 மணியள வில் கணினியியற் கல்லூரி இணைப்பாளர் மாருகா தலைமையில் இடம்பெற்றது. இந்தநிகழ்வில் வரவேற்புரையினை கணினியற் கல் லூரி மாணவி சுகந்தினி நிகழ்த்தினார். மங்கள விளக்கை தமிழர் புனர் வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி, கொழும்பு தமிழர் புனர் வாழ்வுக் கழக திட்ட இணைப்பாளர் சந்துரு பரராஜ சிங்கம், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் சூசைநாதன், தமிழர் புனர்வழ்வுக்கழக கல்வித்திட்ட பணிப்பாளர் ராஜகோபால் ஆகி யோர் ஏற்றிவைத்தனர்.

# சுனாமி பாடல் ஒலிப்பேழை கிளிநொச்சியில் வெளியீடு!





கிளிநொச்சி

சுனாமி பாடல் ஒலிப்பேழை நேற்று முன்தினம் பிற்பகல் புலிகளின் குரல் வானொலியின் அமலன் அரங்கில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

புலிகளின் குரல் துணைப் பொறுப்பாளர் வி.செயல்வீரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை நவம் அறிவுக்கூடப் பொறுப் பாளர் கலைக்கோன் ஏற்றினார்.

தமிழீழத் தேசியக் கொடியை நவம் அறிவுக்கூட அதிபர் சிவா ஏற்றினார். ஈகச்சுடரை போராளி தமிழ்க்கவி ஏற்றினார்.

ஒலிப்பேழையை செஞ் சோலைப் பொறுப்பாளர் ஜனனி வெளியிட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடகப் பிரிவைச் சேர்ந்த வேலணையூர் சுரேஸ் பெற்றுக்கொண்டார்.

சிறப்புப் பிரதிகளை மொழி யாக்கப் பிரிவுப் பொறுப்பாளர் துளசிச்செல்வன், மகளிர் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப் பாளர் வசந்தி ஆகியோர் வழங் கினர்.

இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் மதிப்பீட்டு ரையை நிகழ்த்தினார். அதில் அவர் தெரிவித்ததாவது -

சுனாமியால் 14 ஆயிரத்து 300 பேர் காவுகொள்ளப்பட்ட தேசம். 3000 பேர்வரை காணா மல்போன தேசம். 52 மருத்துவ நிலையங்கள், 57 கல்விக்கூடங் கள், 50 ஆயிரத்துக்கும் அதிக மான வீடுகள் அழிக்கப்பட்டும் உடைத்தெறியப்பட்டதுமான தேசத்தில் நாம் வாழ்ந்துகொண்டி ருக்கிறோம். அதிலிருந்து மீள வேண்டும் என்ற அடுத்தகட் டம் இருக்கிறது.

இசை என்பது மக்களை ஆற்றுப்படுத்தும் மிகப்பெரிய சக்தி. அதன் பதிவாக சுனாமி ஒலிப்பேழை அமைந்துள்ளது.

பேரழிவுக்கு மத்தியில் பேரெழுச்சிகொண்டு கிளர்ந்தெழுந்த விதம் உலக வரலாற்றில் பதியப் பட்டுள்ளது. பேரவலத்திலிருந்து மீளக் கூடிய தன்னம்பிக்கை பெற்ற சமூகமாக நாம் பார்க்கப் படுகின்றோம்.

சுனாமியால் ஏற்பட்டிருக் கின்ற பாதிப்பு தமிழ் மக்களை ஒன்றாக்கியுள்ளது. அதன் வெளிப் பாடுதான் சுனாமி ஒலிப்பேழை என்றார் பாலகுமாரன்.

இந்த நிகழ்வில் புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன் பன் வெளியீட்டுரையையும், நன்றியுரையை புலிகளின் குரல் கலைப்பிரிவு மேலாளர் பா.கபில னும் நிகழ்த்தினர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையில் புலிகளின் குரல் வெளியீட்டுப் பிரிவினால் இந்த வெளியீட்டு விழா நடை பெற்றது.

# வவுனியா - மன்னாரில் தேடுதல் ஆறு பேர் படையினரால் கைது!

வவுனியா

வவுனியா - செட்டிக்குளத் தில் படையினர் கடந்த திங்கட் நடத்திய தேடுதல் நடவடிக்கை யின் போது - ஐந்து இளைஞர் கள் கைது செய்யப்பட்டனர்.

எஸ்.சேகர், ஏ.தியாகராசா, பெருமாள் தமிழ்ச்செல்வம், காளிமுத்து கஜேந்திரன்,ராசலிங் கம் சீலன் ஆகியோரே கைது செய்யப்பட்டு செட்டிகுளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

அதேவேளை, தலைமன் னார் பகுதியிலும் நேற்றுமுன் தினம் நடத்தப்பட்ட தேடுத லில் பலர் விசாரணைக்குட் படுத்தப்பட்டனர். நேற்றுமுன் தினம் மாலை 5.15 மணியளவில் நடத்தப்பட்ட இந்தத் தேடுத லின்போது - முல்லைத்தீவு, கள் ளப்பாட்டைச் சேர்ந்த கணேஸ் சிவராசா என்ற 20 வயது இளை ஞர் கைது செய்யப்பட்டு தலை மன்னார் பொலிஸாரிடம் ஒப் படைக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்ட ஆறு பேரையும் பொலிஸார் விசார ணைக்கு உட்படுத்தி வருகின்ற னர்.

## குளம் புனரமைப்பு

வவுனியா

உலக வங்கியின் நிதியுதவியு டன் நடைமுறைப்படுத்தப்படும் நியாப் திட்டத்தின் கீழ் வவு னியா மாவட்டத்திலுள்ள 22 குளங்கள் புனரமைக்க நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குளத்துக்கும் தலா 30 லட்சம் ரூபா நிதி ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளதாக வவு னியா மாவட்ட கமநல உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் கட் டுப்பாட்டுப் பகுதியில் 8 குளங் களும், இராணுவக்கட்டுப்பாட்டு பகுதியில் 14 குளங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் புனரமைப்புப் பணி கள் அடுத்த மாதம் ஆரம்பமா கும் என அவர் தெரிவித்தார்.

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### டிசெம்பர் - 22

1590: தற்காலத்திலும் வழக்கத்திலுள்ள பல அறுவைச் சிகிசை முறைகளை வகுத்தளித்துப் புகழ் பெற்ற பிரான்ஸைச் சேர்ந்த மருத்துவர் அம்ரோஸ் பாரா மரணமானார்.

1668: முதன் முதலாக அமெரிக்காவில் நூல்களை அச்சுப்பிரதியில் கொண்டு வந்த ஸ்டீபன் டே மரணமடைந்தார்.

1767: முதன் முதலாக குழந்தைகளுக்கென கண்ணைக்கவரும் வகையில் மிகக்குறைந்த விலையில் புத்தகங்களை வெளியிட்ட பிரிட்டிஸைச் சேர்ந்த பதிப்பாளரான ஜோன் நியூபெரி லண்டனில் காலமானார்.

1828: ரேடியம், பல்லாடியம் ஆகிய இரு மூலகங்களைக் கண்டு பிடித்தவரும் ஓவியர்களும், விஞ்ஞானிகளும் ஒரு பொருளைத்துல்லியமாக வரைய உதவிபுரியும் காமிராலூஷிடா என்னும் கருவியைக் கண்டுபிடித்தவருமான பிரிட்டனைச் சேர்ந்த விஞ்ஞானி வில்லியம் ஹைட் வொல்லாஸ்ட்டன் காலமானார்.

1877: ஜெனிவாவைச் சேர்ந்த ரோயல் பிக்டெட் என்பவரால் முதன் முதலாக ஒட்சிசன் நீர்ம வடிவில் தயாரிக்கப்பட்டது.

1895: முதன் முதலாக எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. எக்ஸ்ரேயைக் கண்டு பிடித்தவரும் ஜேர்மனியைச் சேர்ந்தவருமான பௌதிகவியலாளரான வில்ஹெல்ம் ரோண்ட்ஜென் தனது மனைவியின் கையை முதன் முதலாக எக்ஸ்ரே எடுத்தார்.

1914: பெர்லினைச் சேர்ந்த டொக்டர் வான் தாப்பன் என்பவரால் ஷைலில் புரோமைட் கொண்டு தயாரிக்கப்பட்ட கண்ணீர்ப்புகை முதன் முதலாகப் பரீட்சித்துப்பார்க்கப்பட்டது.

1941: இம்மாதம் ஏழாம் திகதி முதல் வேக் தீவில் விமானத் தாக்குதல்களைத் தொடராக மேற்கொண்டுவந்த ஜப்பானியப் படையினர் அந்தத் தீவினுள் நுழைந்தனர்.

1943: பேர்ஸின் மீது நடந்த விமானத் தாக்குதல்களில் 17000 பேர் உயிரிழந்தனர். ஹிட்லரின் தலைமை அலுவலகம் முற்றாக சேதமடைந்தது.

1948: இஸ்ரேல் விடுதலைப் போரில் இறுதிப் போராட்ட ஆரம்ப நாள் 1949 ஜனவரி 8 வரை நடந்த இந்தப் போராட்டத்தால், அனைத்து முனைகளில் இருந்தும் அரபுக்கள் பின்வாங்கினர்.

1956: பிரிட்டிஸ், பிரான்ஸ் இராணுவங்களது இறுதிப் படைப்பிரிவு எகிப்தை விட்டு அதன் சையத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டது.

1961: எமது சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக வியட்நாமில் உயிர்துறந்த முதல் அமெரிக்கன் என அமெரிக்க ஜனாதிபதி ஜான்சனால் குறிப்பிடப்பட்ட இராணுவ ஆலோசகர் ஜேம்ஸ் டேவிஸ் வியட்நாம் போரின்போது வியட்காங் படையினரால் கொல்லப்பட்டார்.

1965: பிரிட்டனில் வீதிப் போக்குவரத்து வேகவரம்பு மணிக்கு 70 மைல்கள் என அறிவிக்கப்பட்டது.

1966: ரொடீஷியா குடியரசு நாடானது.

1972: நிகரகுவாவின் தலைநகர் மானாகுவாவில் நில நடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் 5000 பேர் வரை உயிரிழந்ததுடன், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் வீடிழந்தும் நகரின் பெரும் பகுதி அடியோடு அழிந்தது.

1989: ரூமேனியாவில் இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. தலைநகர் புச்சா ரெஸ்ட்டில் மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

1991: தென்னாசிய நாடுகளது ஐந்தாவது விளையாட்டுப் போட்டிகள் கொழும்பில் ஆரம்பமாகின.

1995: மேற்குக்கரை நகரான பெத்தல ஹேமை பாலஸ்தீனர்களிடம் ஒப்படைத்துவிட்டு இஸ்ரேலியப் படைவெளியேறியது.

தொகுப்பு:- சந்துரு

# மூன்று பொலிஸார் மீதான விளக்கமறியல் நீடிப்பு



கிளிநொச்சி

மன்னாரில் வைத்துக் கைது செய்யப்பட்ட மூன்று பொலி ஸாரையும் எதிர்வரும் மூன்றாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதிமன்று உத்தரவிட்டது.

மன்னாரில் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் அனுமதி யின்றி உள்நுழைந்தார்கள் எனக் கைது செய்யப்பட்ட மூன்று பொலி ஸார் மீதான விசாரணை கிளி நொச்சி மாவட்ட தமிழீழ நீதி மன்றில் நேற்று முன்தினம் இடம் பெற்றது. மூன்று பொலிஸார் தொடர்பாக நடத்தப்பட்ட புலன் விசாரணைகளில் பயன் தரும் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன எனவும், தமிழீழ குற்றவியல் நடைமுறைச் சட் டம் 60 இன் கீழ் விசாரணை நடத்துவதற்கு மேலதிகமான கால அவகாசம் தருமாறும், இவர் களைத் தொட ர்ந்து விசாரணை செய்வதற்கு தமிழீழ சட்டவாக் கல் செயலகத்திடமிருந்து அனுமதி பெற்றுள்ளதாகவும் காவல்துறை பரிசோதனைப் பிரி வினர் தெரிவித்தனர்.

அதேவேளை, இரு தரப்பு வாதங்களையும் கேட்ட கிளி நொச்சி மாவட்ட தமிழீழ நீதி மன்ற நீதியாளர் சாதனா - மூன்று பொலிஸாரையும் தமி ழீழ குற்றவியல் நடைமுறைச் சட்டம் 60, 61 கீழ் விளக்கமறிய லில் வைக்குமாறு உத்தரவிட் டதுடன் இவர்கள் தமது மேலதி காரிகளுடன் தமிழீழ காவல்துறை யினர் முன்னிலையில் தொலை பேசியில் தொடர்புகொள்ள வும் அனுமதி வழங்கியதுடன், அடுத்த விசாரணை ஜனவரி 30 ஆம் திகதி இடம்பெறுமெனவும் அறிவித்தார்.

நமது ஈழநாடு

வைர வரிகள்

பருவத்தோ டொட்டா வொழுகல் திருவினை
தீராமை யார்க்குங் கயிறு

திருக்குறள்

## நமது நோக்கு

# இணைத்தலைமை நாடுகளின் கவனத்திற்கு...

இலங்கையில் அமைதி மற்றும் சமாதான சூழலுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் நிலைமையின் பின்னணியில் இராணுவத் துணைப்படைகளின் செயற்பாடும் உள்ளதாக ஒப்புக கொண்டுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகள் - இவ்வாறானவற்றை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதி முயற்சிகளை முன்னெடுக்கும் வகையில் சமாதானம் மீதான பற்றுறுதியை இலங்கையரசு வெளிப்படுத்த வேண்டும் எனவும் வழமை போன்று தனது அறிவிப்புச் சங்கினை ஊதியுள்ளன.

உண்மையில் இந்த இணைத்தலைமை நாடுகள் இலங்கையின் இன்றைய அரசியல் யதார்த்தத்தை மூடி மறைக்கும் தந்திரோபாயத்தை அல்லது அரசின் செயற்பாடுகளைச சமாளிக்கும் உத்தியை தொடர்கின்ற அதேவேளை, விடுதலைப்புலிகளை எச்சரித்து கண்டிப்பதையும் ஒரு மரபாகக் கொண்டிருப்பது வெளிப்படையான விடயமே.

இலங்கையின் இன்றைய சகல அவலங்களுக்கும், தமிழ் மக்கள் அனுபவிக்கும் பல தசாப்தகால துன்ப துயரங்களுக்கும் சிங்கள ஆட்சியாளரின் இனவெறியுடன் கூடிய அடக்குமுறை ஆட்சியின் செயற்பாடுகளும், மோசமான பக்கச் சார்புத்தன்மையுடைய அரசியல் யாப்புமே பிரதான காரணம் என்பதை இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் அனைத்தும் நன்றாகத் தெரிந்திருந்தும்- தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தின் நியாயத்தன்மையைப் புறக்கணித்து விட்டு அரசுசார்பில் நின்று கருத்து வெளியிடுவதானது கவலை தரும் செய்தியாகும்.

இந்த இணைத்தலைமை நாடுகளில் சில, தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கையின் அரசுகள் மேற்கொண்ட திட்டமிட்ட இன அழிப்புச் செயற்பாடுகளுக்கு - இராணுவ ரீதியிலான அடக்குமுறைகளுக்கு ஆயுதரீதியில் உதவிகளையும், இராணுவ ரீதியிலான பயிற்சிகளையும், கனரக யுத்த தளபாடங்கள், உபகரணங்கள், போர் விமானங்கள், யுத்தக் கப்பல்கள் என அனைத்தையும் அள்ளி வழங்கி விட்டே இப்போது சமாதானப் பாட்டைப் பாட ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதைத் தமிழர்கள் அறியாதவர்களல்ல.

சமாதானச் சூழல் நிலவிவந்த காலத்திலும் கூட இலங்கையின் விவகாரம் அமைதி முறையில் நேர்மையாக பேசித்தீர்க்க வேண்டிய அரசியல் பிரச்சினை என்பதை ஏற்றுக்கொண்ட பின்னரும், இந்த இணைத்தலைமை நாடுகளில் சில தமிழ் மக்களின் எழுச்சியையும், விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளையும் பயங்கரவாதமென பட்டியலிட்டுப் பார்க்க முனைப்புடன் செயற்படுவதன் சர்வதேச அரசியல் உள்நோக்கம் தான் சமாதான வலியுறுத்திகள் மீதான சந்தேகத்தையும், அவர்களின் செயற்பாடுகள் தொடர்பான ஏமாற்றத்தையும் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

உண்மையில் இன்று சமாதான சூழலுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலுக்கான முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டியவர்கள் அரசாங்கமும், சமாதானத்தை வலியுறுத்தி நிற்கும் சர்வதேச சமூகமும், நோர்வே அனுசரணையாளர்களுமேயாவர்.

போர்நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டபின்னர் அதில் கையெழுத்திட்ட அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், அரசும், அரசின் உயர் தலைமைப்பீடத்தை அலங்கரித்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதியும், அவரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஆயுதப்படைகளும் போர்நிறுத்த உடன்பாட்டின் அம்சங்களை ஒப்புக்கொண்டதன் பிரகாரம் மனோதர்மத்துடன் நேர்மையாக அமுல் செய்திருப்பார்களேயானால்...

அவர்கள் அவ்வாறு அமுல் செய்வதை கட்டம் கட்டமாக நோர்வே அனுசரணைப் பணியாளர்கள் உறுதி செய்திருப்பார்களேயானால்...

அவ்வாறு அமுல் செய்யும்படி அரசுக்கு சகல வழிகளிலும் உதவும் சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுத்திருப்பார்களேயானால்...

சமாதான சூழலுக்கான இன்றைய அவலநிலை ஏற்பட்டிருக்காது என்பதை இணைத்தலைமை நாடுகள் புரிந்து கொள்வது அவசியமாகும்.

அதனை விடுத்து தொடர்ந்தும் சமாதானத்தின் பேரிலும் கூட ஒடுக்குமுறைக்குள்ளாகி இயல்பு வாழ்வை இழந்து அலையும் மக்கள் பக்கம் நின்று குரல் கொடுக்கும் விடுதலைப்புலிகளை எச்சரிப்பது - தமிழ் மக்களை முற்றாகவே அவமதிக்கும் செயலேயாகும்.

கடந்த தேர்தலில் தமிழர்கள் வாக்களிக்காமல் பகிஷ்கரித்தமையானது அவர்களின் சுயவிருப்பின் பேரிலான நடவடிக்கையேயாகும். இது அவர்களின் ஜனநாயக உரிமையுமாகும்.

இதேவேளை, அரசியல் ஒடுக்குமுறைக்குள்ளாகியுள்ள ஓர் இனத்திடம் அவர்களின் ஜனநாயக உரிமைகளை நிராகரிக்கும் ஒரு அரசு நடத்தும் தேர்தலில் வாக்களித்து உங்கள் "புள்ளடி" போடும் உரிமையைப் பயன்படுத்துங்கள் என்று கூறுவது அந்த மக்களின் காதில் பூச்சுற்ற முயலும் செயற்பாடேயாகு ம்.


இதனை இணைத்தலைமை நாடுகள் சுட்டிக்காட்டி குற்றம் சுமத்த முயல்வது அர்த்தமற்ற விடயமேயாகும்.

இன்றைய சூழலில் சமாதானத்தின் மீதான பற்றுறுதியை வெளிப்படுத்தி செயற்படவேண்டிய பொறுப்பு அரசிடமே உள்ளது. அந்தப் பொறுப்பை அக்கறையுடன், நேர்மையுடன் ஏற்று இந்த ஆட்சி செயற்படுமா என்பதே இப்போதைய கேள்வி.

இதற்கான பதிலை சர்வதேச சமூகமே உறுதிசெய்ய வேண்டும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




# மாணவர் அனுமதியில் நன்கொடை எனும் பெயரில் பேரம் பேசுகின்றன யாழ்.நகரில் உள்ள பிரபல பாடசாலைகள்

அண்மையில் தரம் 1 இல் மாணவர்களை அனுமதிக்கும் பதிவுகள் மும்முரமாக பல பாடசாலைகளில் இடம்பெற்றன. இவற்றுள் யாழ்.நகரில் உள்ள ஒரு சில பிரபல பாடசாலைகளில் ஏழ்மைப்பட்ட பெற்றோருக்கு மனவேதனையைத் தூண்டுகின்ற சம்பவங்கள் அங்காங்கே இடம்பெற்றன. அனுமதிக்கான எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றி சித்திபெற்று, நேர்முகத் தேர்வுக்கும் தோற்றி சித்திபெற்று தெரிவான பின் நன்கொடை எனும் பெயரில் சிட்டை எழுதி "ரூபா 25ஆயிரத்திற்குக் குறையாது பணம் கட்ட வேண்டும்" எனப் பேரம் பேசப்பட்டதாகப் பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர். இத் தொகையினை சற்றுக்குறைத்து ஏழ்மைப்பட்ட எமக்கு உதவி செய்யுமாறு அதிபர்களிடம் கேட்டபோது "எமது பாடசாலை அனுமதிக்காகப் பலர் தவம் கிடக்கின்றனர் பணம் கட்டமுடியாவிட்டால் அனுமதியை இரத்துச் செய்கின்றோம்" என அதட்டியதாக விசனம் தெரிவித்தனர் பெற்றோர்கள்.

பல வகைப்பட்ட இடர்ப்பாடுகள் மத்தியிலும் தமது பிள்ளைகள் முன்னேற வேண்டும் எனும் நோக்கில் மேற்படி பணத்தொகை கட்டப்பட்டு அனுமதி பெறப்பட்டதாகவும், பெருந்தொகையான பணமென்பதால் கட்ட முடியாத சூழ்நிலையில் தமது பிள்ளைகள் பரீட்சையில் தேர்ச்சி பெற்றும், அனுமதி நிராகரிக்கப்பட்டதாகவும் பல பெற்றோர்கள் தெரிவித்தனர்.

உண்மையிலே இக்கட்டுரையானது கௌரவத்துக்குரிய அதிபர்களையோ அல்லது பாடசாலை சமூகங்களையோ கேவலப்படுத்துவதற்காக எழுதப்படவில்லை. அவ்வாறான நோக்கமிருப்பின் குறித்த பாடசாலையின் பெயர் சுட்டி ஆதாரபூர்வமாக எழுதப்பட்டிருக்கும். ஏழ்மைப்பட்ட சமூகங்களின் நிலைமைகளை உலகறியவைப்பது பத்திரிகைகளின் கடமை என்கின்ற வகையிலே தான் இதனைச் சுட்டிக்காட்டுகின்றோம்.

சமூகத்துக்கு வழிகாட்ட வேண்டிய பாடசாலை சமூகங்களே இப்படிப்பட்ட சுரண்டல் நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டிருப்பது மிக வேதனைக்குரிய ஒன்று. இலங்கையில் அமுல்படுத்தப்பட்டு வரும் இலவசக் கல்வித்திட்டத்தின் அடிப்படையில் மாணவ அனுமதியின் போது சந்தாப்பணம் 30ரூபாவைத் தவிர வேறு எந்தப் பணத்தினையும் அறவிட எந்தவித அதிகாரமும் அதிபர்களுக்கில்லை. பாடசாலைக்கான நன்கொடை நிதி என பெற்றோர்கள் விரும்பினால் தாம் விரும்பும் தொகையினைக் கொடுக்கலாமே தவிர, அதற்கு அதிபர்கள் பேரம் பேசமுடியாது.

"நன்கொடை நிதி" என்பதன் பொருளையே அதிபர்கள் புரியாது செயற்படுவது வேடிக்கையாக இருக்கிறது. பாடசாலைக்கென்று இருக்கின்ற ஒருவகை கௌரவங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு பரீட்சையில் சித்திபெற்று நேர்முகத்தேர்விலும் சித்தி பெற்ற மாணவர்களின் தனிப்பட்ட நலன்களை கருத்தில் கொள்ளாது "பணம் கட்ட முடியாவிட்டால் அனுமதியில்லை" என அதட்டுவது, இவர்களின் பாமரத் தன்மை கொண்ட அநாகரிகப் போக்கினை வெளிப்படுத்தி நிற்கின்றது. அரசாங்க பாடசாலைகள் அல்லாது கிறிஸ்தவ திருச்சபைகளால் வழி நடத்தப்படும் தனியார் பாடசாலைகளில் அதிபர்களுக்கு அப்பால் உள்ள மேலிடத்தினால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக இருக்கும். இதற்கு அதிபர்கள் எதுவும் செய்ய முடியாத கட்டத்தில் இருப்பதைப் பெற்றோர்களும் விளங்கிக்கொள்ள வேண் டும்.

ஏழ்மையைப் புரிந்து ஜீவசேவைக்கென பல செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் கிறிஸ்தவ திருச்சபைகள் மேற்படி கல்விச் சேவைக்கும் ஏழ்மைப்பட்ட பெற்றோருக்கும் சற்று உதவிபுரியவேண்டும். மாணவர்களின் ஆற்றல்களுக்கு மதிப்பளிக்க வேண்டுமே தவிர, பொருளாதாரநிலை காரணமாக அவர்கள் சந்தர்ப்பத்தை இழக்க இடம் கொடுக்கக் கூடாது.

இதனைவிட பதவியில் உள்ளவர்களின் நிர்வாகச் சிக்கல்களையும் ஒரு துருவத்தில் நோக்கவேண்டும். அனுமதிகளைக் மட்டுப்படுத்த ஏதோ ஒரு முறையைப் பயன்படுத்தியே ஆகவேண்டும். ஆனால், அதற்காக கட்டுப் பணத்தொகையில் இம்மட்டுப்படுத்தலை மேற்கொள்ளக்கூடாது. இதற்காக ஏற்கனவே நடைமுறையில் உள்ள பரீட்சைகள் ரீதியான வெட்டுப்புள்ளி கல்வி உளவியலுக்கு, புதிய கல்விச் சீர்திருத்த முறைமைகளுக்கு சற்று முரணாக இருப்பினும், நடைமுறை நிர்வாகத்திற்கு ஓரளவு பொருத்தமான இந்தப் பரீட்சைகளில் சித்தி பெற்றமாணவர்களை கட்டுப் பணம் இல்லாத காரணத்தினால் தயவு செய்து கவலைக் குரியவர்களாக்காதீர்கள்.

**ஆர்.கே.மேனன்.**



நீத்தார் நயப்புரை

# அளவெட்டி தந்த அருட்கவி விநாசித்தம்பி

அளவெட்டிக் கிராமம் பண்டு தொட்டுப் பல பெருமைகளுக்குரியது. வைத்தியநாகதம்பிரான், கனக சபைப்புலவர் முதலாய அறிஞர்கள் அறிவொளி பரப்பிய கிராமம் இது. அவர்களுக்குப்பின் தமிழ் வளர்க்க நானென்று கங்கணம்கட்டி நின்றவர் எங்கள் அருட்கவி அவர்கள். தமிழோடு அவர் தொண்டு நின்று விடவில்லை. சைவம் வளர்த்த பெருமையும் அவருக்குண்டு. அவர் இருந்ததால் அளவெட்டி பெருமைபெற்றது. அளவெட்டியைப் பல பெரியார்களும், அறிஞர்களும நாடிவரக் காரணமாக இருந்தவர். அவரின் மறைவினால் அளவெட்டிக் கிராமம் ஒரு கலை தேய்ந்த நிலையில் உள்ளது. நாகவரத நாராயணர் ஆலயமும் பொலிவிழந்தது. கந்தபுராண வசன காவியம் தந்த கனிஷ்ட கச்சியப்பர் போய்விட்டாரென்றே சைவ உலகம் ஏங்குகின்றது. அளவெட்டிக்கிராமம் அவராற்பெற்ற பெருமைகளை எவ்வாறு ஈடு செய்யப்போகிறதோ யாமறியோம்.

பெருங்கலைஞராக, சோதிட வித்தகராக, மருத்துவ வல்லுனராக, கட்டடக் கலை நிபுணராக, பல்துறை விற்பன்னராக விளங்கிய பெருமை இவருக்குண்டு. "ஆலயங்களை அரசனும் கட்டலாம் ஆண்டியும் கட்டலாம்" என்பார்கள். அரசனாகவும், ஆண்டியாகவும் இல்லாமல் சாதாரண மனிதனாக நின்று நாகவரத நாராயணர் ஆலயத்தைச் சின்னஞ்சிறிதாக ஆரம்பித்துப் பென்னம் பெரிதாக்கிய பெருமைக்குரியவர் அருட்கவி அவர்கள். பழைய காலத்தமிழ் நாட்டு அரசரோடு ஒப்பிடக்கூடிய நிலையில் நாராயணர் ஆலயத்தைச் சிறப்புற அமைத்த பெருமையும் இவருக்குண்டு. இந்து மகாசபைத் தலைவராக, பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினராக இருந்து சமயக்கல்விக்கும் தமிழ் மொழிக்கல்விக்கும் பெருந்தொண்டாற்றியவர் அருட்கவி அவர்கள்.

இளமையிலேயே கவிபாடும் வல்லமை இயற்கையாகவே இவருக்கிருந்தது. "காரிகை கற்றுக் கவிபாடுவதிலும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று" என்னும் ஆன்றோர் வாக்கு இவரைப் பொறுத்தவரை முழுக்க முழுக்க உண்மையாகும். கவி பாடத் தெரிந்த பிறகே காரிகை கற்றவர் இவர். இவருடைய இளமைக்கவிகள் காரிகையில்லாமல் பாடியகவிகள், இவரின்கவிதைகள் இலக்கணம் நிரம்பப் பெற்று மரபுக்கவிதைகள் என்ற பெயர் தாங்கி நிற்பது இவரொரு வரகவி என்பதற்குச் சான்று பகரும்.

அவர் போய்விட்டார். அவரிடத்தை நிரப்ப ஆளில்லை. அவர் இருந்த இடம் வெற்றிடமாகவே என்றும் இருக்கவிடாது நாகவரத நாராயணர் அருள் சுரந்து அவ்விடத்திடத்தில் தக்க ஒருவரை அமர்த்துவாரென நம்புவோம்.

அவரான்மா நாராயணர் தாழ் நிழற் கீழ் ஆறுதல் பெறுக வென்று ஏத்தி ஏத்தித் தொழுவோம்.

# பாடசாலை ஆதார முகாமைத்துவம்; கல்வித்துறையில் பயனுறுதியான வெளியீடுகளை ஏற்படுத்தும்

**உலகளாவிய ரீதியில் கல்வியமைப்பில் விரைவான மாற்றங்களும் அபிவிருத்திகளும் ஏற்பட்டுவருகின்றன. இந்த நீரோட்டத்தில் நாமும் இணைய வேண்டியுள்ளது. இந்த வகையில் பாடசாலை ஆதார முகாமைத்துவம் (School Base Management) என்ற எண்ணக்கரு இலங்கைப் பாடசாலைகளில் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் நடை முறைப்படுத்துவதற்கான முதன்மை நிகழ்ச்சித் திட்டம் (Pilot Programme)- தயாராகி வரும் இந்த வேளை, இது தொடர்பான ஆய்வை நடத்தி வரும் பா.தனபாலன் அவர்களுடனான நேர்காணல் இங்கு தரப்படுகின்றது.**



பா.தனபாலன்

**இன்றைய இலங்கையின் பாடசாலைக் கல்வி முறைமை வினைத்திறனான செயலாற்றுகைகளையும், சாதனைகளையும் கொண்டுள்ளதா?**

தற்போது இலங்கைப் பாடசாலைக் கல்வியமைப்புகள் பல பிரச்சினைகளையும், சவால்களையும் எதிர்கொண்டுள்ளன. மேலும், நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக,கல்வி நடைமுறைகள் ஒரு பன்முக தோல்வியுற்ற நெருக்கடி நிலையில் காணப்படுகின்றன. இந்த நிலையிலிருந்து நோக்கும் போது பாடசாலைக் கல்வியமைப்புகள் வினைத்திறனான தன்மைகளைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன், மோசமான நிலையில் காணப்படுவதாகப் பல கல்வியியல் ஆய்வுகள் எடுத்தியம்புகின்றன.

**நீங்கள்பன்முகதோல்வியுற்றநெருக்கடிகள் என எவற்றைக் கருதுகின்றீர்கள்?**

இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்த இன்றுவரை கடந்த ஐந்து சதாப்தங்கள் பல்முகத் தோல்விகளைத் தளமாகக் கொண்ட நிலையே காணப்படுகின்றது. கால்நூற்றாண்டுக்கு மேலான யுத்தம், இன வன்முறைகள், தென்னிலங்கை இளைஞர் கிளர்ச்சிகள், விழுமியங்களும், ஒழுக்கமும் சீரழிந்தமை, உலகிலேயே வன்முறைகள் கூடிய, சிறுவர் பாலியல் துஸ்பிரயோகம் கூடிய, தற்கொலைகள் கூடிய மூன்றாவது நாடாக இலங்கை யுனிசெப்பால் இனம் காணப்பட்டுள்ளமை, திறமையற்றவர்களினதும், சந்தர்ப்பவாதிகளினதும், அதிகாரங்கள் தடையற்ற நுகர்ச்சி, மனித உரிமை மீறல்கள், சட்டம், நீதி, அரசாங்கத் துறைகளில் ஊழல், இளைஞர் வேலையின்மை, வறுமை, மாயமாக நிற்கும் நிரந்தர சமாதானம், இயற்கை அழிவுகள் இவைகள் அனைத்தும் தோல்வியுற்ற நெருக்கடிகளாக உள்ளன.

**அபிவிருத்தியின் இயந்திரம் கல்வி என்ற வகையில் இந்தப் பிரச்சினைகளில் இருந்து தீர்வுகாண கல்வியை இதுவரை ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் தேசிய ரீதியில் முறையாகப் பயன்படுத்தவில்லை எனக்கருதுகின்றீர்களா?**

இலங்கைத் தீவில் தேசிய ரீதியில் கல்விக் கொள்கையாக்கம்- நடைமுறைகள் பற்றிய முழுமையான செயலாற்றுகை அல்லது தொடர்ச்சியான திட்டங்கள் முறையாக அமுலாக்கப்படவில்லை. தேசிய பிரச்சினை என்பது இலங்கையில் ஒருமித்து ஏற்பட்டமைக்கான கல்வி எச்சங்களைக் காண முடியவில்லை. ஆனாலும், கல்வியானது தேசிய விழிப்புணர்ச்சிக்கு அடிப்படையானது. தேசிய விழிப்புணர்ச்சி இல்லையாயின் தேசிய கல்வி முறைமை வெற்றிகரமாக இயங்காது. இந்த வகையில் இலங்கையில் இதுவரையான அரசாங்கங்கள் தேசிய ரீதியிலான கல்வி தொடர்பான நச்சு வட்டத்திலிருந்து தப்ப முடியாத சூழலுக்கு ஆளாகியுள்ளன என்பது புலனாகின்றது. இந்த நிலையிலிருந்து கொண்டு புரட்சிகரமாகக் கல்வி மூலம் பல்வேறு பிரச்சினைகளை தீர்க்கும் நிலை இலங்கையில் ஏற்பட்டுள்ளது எனக் கூற முடியவில்லை.

**அவ்வாறெனின் இலங்கையில் இதுவரையான காலத்தில் கல்வி அபிவிருத்தி நடைமுறைகள் மேற்கொள்ளப்படவில்லை என்கிறீர்களா?**

நல்ல விடயங்கள் நடக்கவில்லை என நான் கூறவில்லை. பல நடந்துள்ளன. உதாரணமாக மனித அபிவிருத்திக்குறிகாட்டி, கலாசார மரபுரிமைகள், ஆடைக்கைத்தொழில் விருத்திகள், பொதுமக்களுக்கான வீடமைப்பு, சமூகநலத் திட்டங்கள், கல்விச் சீர்திருத்தங்கள் , 2002 ஆம் ஆண்டு யுத்த நிறுத்தம் எனப் பல விடயங்களும் நிகழ்ந்துள்ளன. ஆனாலும், மொத்தமாகப் பார்க்கும் போது விளைவுகள் போதுமானவையாக இல்லை.

**இந்த நிலையிலிருந்து கல்விக்கான பரந்த செயல்வடிவம் ஒன்றை இலக்காகக் கொண்டு கல்விச் சீர்திருத்தம் நடைபெறுவது பற்றிய தங்கள் கருத்து?**

சீர்த்திருத்தங்கள் விரைவாக நிகழ்கின்றன. சீர்திருத்தங்களுக்கான காரணம் நடைமுறைப்படுத்தப்படும் கல்விச் செயற்பாடுகளின் தோல்வியே ஆகும். எமது எதிர்காலச் சந்ததியினரான மாணவர்கள் ஒவ்வொருவருக்கும். அவரவர் ஆற்றல்களை விருத்தியாக்கி செழுமையும், முழுமையும் கொண்ட வாழ்க்கையை வாழ கல்வியினூடாகவே வழிகாட்ட வேண்டியுள்ளது. நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் சமமான வாய்ப்பு வழங்கப்பட்டு அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை சமூக, பொருளாதார, அரசியல், கலாசார ரீதியாக உயர்த்தும் வகையில் நாட்டிலுள்ள அனைத்துப் பிள்ளைகளும் சம வாய்ப்பைப் பெறும் கல்வி முறையை மேலும் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. ஒடுக்கப்பட்டவர்களை ஒடுக்குமுறைகளில்இருந்து மீட்கும் கருவியாகக் கல்வியைக் கொண்டு புதிய செயல்முறைகளை, புரட்சிகர நடவடிக்கைகளை, துணி கரமான முடிவுகளை எடுக்கவேண்டியுள்ளது.

**கல்வியை எதிர்காலச் சந்தத்தியினரான இன்றை மாணவர்களுக்கு வழங்கும் பாடசாலைகள் எதிர்நோக்கும் சவால்கள் எவையாகவுள்ளன?**

தற்போதைய கல்வி முகாமைத்துவக் குறைபாடுகளால் வினைத்திறன் பொருந்திய வெளியீடுகளைப் பாடசாலைகளால் மேற்கொள்ள முடியவில்லை.பாடசாலைகளில் இந்து வெளியேறிய மிகப் பெரும்பான்மையினர் தொழில்கள் அற்று இருக்கின்றனர். இதற்கான செயன்முறைகள் முழுமையாகப் பாடசாலைப் பாடவிதானங்களில் இல்லாமை, மாணவர் வன்முறைகள் பெருகியுள்ளமை, இடைவிலகல், மாணவர்கள் வரவின்மை, வளப்போதாமைகள் எனப் பல சவால்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

இந்தவேளை, கிபெக் கல்விச் சபைத் தலைவர் றொபட் கூறிய கருத்தை ஞாபகப்படுத்த வேண்டியுள்ளது. உலகிலுள்ள அனைத்தும் முன்னோக்கி, விரைவாக மாற்றங்களுக்குள்ளாகிச் செல்கையில் - பாடசாலைகள் மட்டும் ஒரே இடத்தில் இருப்பதாத் தெரிகின்றது. பாடசாலைகள், கல்வியமைப்புகளுக்கும் சவாலாக பல விரைவான சமூகமாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. இந்த வேளை, இன்றைய பாடசாலைகள் விரைவான அபிவிருத்தி நோக்கிய மாற்றங்களுக்கான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டிய கட்டத்துக்கு வந்தவிட்டன எனத் தெரிவிக்கின்றார். இந்தநிலை எமது பாடசாலைகளுக்கும் பொருத்தமாகி இருக்கிறது.

**இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையில் பாடசாலை ஆதார முகாமைத்துவம் தொடர்பான எடுத்தக் காட்டுக்களும், நடைமுறைகளும் பின்பற்றப்படுதல் தொடர்பான செயற்திட்டங்கள் ஆரம்பமாகியுள்ளது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

இலங்கை நாட்டில் கடந்த நான்கு தசாப்தங்களாக கல்வி நிர்வாகத்தில் பரவலாக்கம் செய்வதில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கல்வி முகாமைத்துவத்தில் வினைதிறனுடன் செயற்படும் வடிவிலான செயலாற்றுகைகள் கீழ் மட்டத்துக்குப் பரவலாக்கம் செய்தல் படிப்படியாக நடைபெற்றாலும், பாடசாலை மட்டம் வரை அது முழுதாகச் சென்றடையவில்லை.

எனவேதான், தற்போது கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகள் ஊடாக பாடசாலைகளிடம் பொறுப்புகளை ஒப்படைக்கும் பாடசாலை ஆதார முகாமைத்துவ செயலாற்றுகைகள் விரைவாக நடைமுறைக்கு வருகின்றன. 2006 ஆம் ஆண்டு முதன்மை நிகழ்ச்சித்திட்ட (Pilot Programme) தேசிய நவோதய, வலயமட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 2000 பாடசாலைகளில் பாடசாலை ஆதார முகாமைத்துவ நடைமுறைகள் ஆரம்பமாகின்றன. இது தொடர்பான செயலமர்வுகள் நடைபெறுகின்றன. புதிய சுற்றறிக்கைகள் வெளிவரவுள்ளன.

**இந்தப் பாடசாலை ஆதார முகாமைத்துவம் பற்றிய எண்ணக்கரு விளக்கம் ஒன்றைத் தரமுடியுமா?**

பாடசாலைதொடர்பானமுகாமைத்துவத்தையும், தீர்மானம் எடுக்கும் உரிமையையும் பாடசாலை அதிபர், பாடசாலை முகாமைத்துவ சபையிடம் கையளித்தலே பாடசாலை ஆதார முகாமைத்துவத்தின் அடிப்படையாகும்.

பாடசாலை அதிபர் வெறுமனே நிர்வாகியாக மட்டும் இருக்கின்ற நிலைமாறி, அவர் பாடசாலை ஆதார முகாமையாளராக, தீர்மானங்களை மேற்கொள்பவராக, அங்கீகரிக்கப்பட்டுள்ளாவராக, சமூகத்தலைவராகச் செயலாற்ற வேண்டியுள்ளது. இதற்குப் பாடசாலை முகாமைத்துவ சபை உதவும். பாடசாலைகளுக்குப் பொறுப்புகளை ஒப்டைப்பதன் மூலம் ஒவ்வொரு பாடசாலையும் தனது செயலாற்றுகைகளுக்கு வகை கூறவேண்டிய (Accountability) விலகிக் கொள்ள முடியாத பொறுப்பு கூற வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

எனவே, பாடசாலைகள் வினைத்திறனாக இயங்க வேண்டும். இல்லையேல் உடனடியாக மாற்றங்களுக்கு உள்ளாக்கப்படும். இது தொடர்பாக அதிபர்களுக்கு வான்மை விருத்திப்பயில்வுகள் நடைபெறுகின்றன.

**பாடசாலை முகாமைத்தவ சபைகள் பற்றிக் கூறினிர்கள் அவற்றின் பணி என்னவாக இருக்கின்றன.?**

ஒவ்வொரு பாடசாலையும் இனி ஒரு முகாமைத்துவச் சபையினாலேயே நிர்வகிக்கப்படும்.இதன் முதன்மையாளர், பாடசாலை அதிபர் இவருடன் ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், உள்ளூர் உறுப்பினர்கள், திணைக்களத்தால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் அங்கம் வகிப்பர். குறித்த பாடசாலைக்கு என ஒரு கொள்கையையும், பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தையும் ( School Policy and Programme) இந்தச் சபையே தயாரிக்கும். இதனைத் தயாரிக்கையில் பாடசாலை எந்தச் சமூகத்துக்குத் தன் சேவையை ஆற்றுகின்றதோ அதனைக் கவனத்தில் எடுத்து இந்த நிகழ்ச்சித் திட்டம் வடிவமைக்கப்படும். பாடசாலைக்கும் - சமூகத்துக்குமிடையிலான மிக உயிர்ப்பான, நெருக்கமான தொடர்பையும், இடைத்தாக்கத்தையும் பாடசாலைச் சபை ஏற்படுத்தும். இது பாடசாலையின் அபிவிருத்திக்கு உந்து தலைக் கொடுக்கும்.

**பாடசாலை தொடர்பான நிதி முகாமை எவ்வாறு கையாளப்படும்?**

நிதியானது இனி நேரடியாகவே பாடசாலைக்கு வழங்கப்படவுள்ளது. மாணவர் விகிதாசார அடிப்படையில் நிதி வழங்கப்படும். பாடசாலைக் கொள்கையுடன் இணைக்கப்பட்டதாக நிதி நடவடிக்கைத் தகுதிப் பிரமாணங்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும். இது தொடர்பான சுற்றறிக்கைகள் வெளிவரவுள்ளன.

மேலும் தற்போது தர உள்ளீடு கள் என்ற வகையில் பாடசாலைக்கு நிதியை அரசாங்கம் நேரடியாக வழங்கிவருவதை அறிவீர்கள். இதேபோல், பாடசாலை - ஆதார ஆசிரியர் தொடர்கல்வி நிகழ்ச்சிச் திட்டம், பாடசாலை ஆதார கலைத்திட்ட முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம், புதிய வளங்களை சமூகத்திலிருந்து பெறுதல் எனப் பல்வேறு செயற்திட்டங்களுக்கு, நேரடியாகப் பாடசாலைகளுக்கே நிதி வழங்கப்படவுள்ளன. இது தொடர்பான முன் செய் திட்டமாகத் தற்போது ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

**பாடசாலை அபிவிருத்தி நோக்கிய ஐந்தாண்டுத் திட்டத்தின் செயல் முறைகள் எவையாகவுள்ளன.?**

தற்போது பாடசாலையின் வல்லமைகள் (Strengths) நலிவுகள் (Weaknesses) என்பவற்றைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் குறித்த பாடசாலையின் வினைத்திறனையும்- விளைதிறன்களையும் அதிகரிக்கும் நோக்குடன் ஐந்தாண்டுத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதில் ஒவ்வொரு வருடமும் பாடசாலை எதிர்நோக்கும் சவால்கள், பிரச்சினைகளை வெற்றி கொள்வதற்குத் தேவையான நடைமுறைகள், ஆய்வுகள், செயற்பாட்டுத் தீர்வுகள் முன்மொழியப்படுகின்றன. இவற்றை நடைமுறைப்படுத்தப் பாடசாலை அதிபர், முகாமைத்துவக்குழு, ஆசிரியர் சமூகம், திணைக்களம், பொது அமைப்புக்களின் ஒருங்கிணைப்பு முன்வைக்கப்படுகின்றது. நீண்ட கால நோக்கில் பாடசாலைகள் உறுதியான- தன்னிச்சையான நிறுவனங்களாக அரச உதவிகள் இன்றியே வினைத்திறனுடன் இயங்கும் போக்குக்கான பெருமளவு அடிப் படைகளையே பாடசாலை ஆதார முகாமைத்துவ ஐந்தாண்டுச் செயலாற்றுகைத் திட்டம் கொண்டுள்ளது.

மருத்துவத்தில் இலட்சணங்களை ஆராய்ந்து ஆய்வு செய்து வியாதியைக் கண்டு பிடிக்கும் Diagnosis முறைப்படி பாடசாலையின் பிரச்சினைகளை கண்டறிந்து தீர்க்கும் அடிப்படைகளை பாடசாலை ஆதார முகாமைத்துவ செல்நெறி கொண்டுள்ளது.

**இந்தப் பாடசாலை ஆதார முகாமைத்துவம் தொடர்பாகப் பல விமர்சனங்கள் எழுந்துள்ளன. அவை தொடர்பாகதாங்கள் என்ன கருதுகிறீர்கள்?**

பல கோணங்களில் பல வகையான விமர்சனங்கள் எழுந்துள்ளன. கல்வித்துறையில் விமர்சனங்களினூடாகவே அபிவிருத்தியைக் காணலாம். பாடசாலைகளைத் தனியார் கம்பனிகளாக மாற்றும் செயன்முறை என்றும், பணக்காரர்களுக்கு உகந்த-உதவுகின்ற நோக்குடையன என்றும் பல குற்றச் சாட்டுக்களும் எழுகின்றன. இவற்றில் உண்மைகளும் உள்ளன. இதில் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். இலங்கையில் இலவசக்கல்வி கூட இன்றும் வசதியுள்ளவர்களுக்கே வாய்ப்பு களை அளிக்கிறது எனவும், குற்றம் சுமத்தப்படுகிறது. இந்த நிலைகளில் இருந்து நோக்கும் போது - இன்றைய பாடசாலைகள் இவற்றைவிட மோசமான பல பிரச்சினைகளையும், சிக்கல்களையும் எதிர் நோக்குகின்றன. கல்வி தொடர்பாக அரசாங்க செலவை பயனுறுதியாக்கவும், பாடசாலைகள் தற்போது எதிர்நோக்கும் பல பிரச்சினைகளைத் தீர்வு காணும் ஒரு படியாக பாடசாலை ஆதார முகாமைத் துவம் அமைகின்றது என்பதே கல்வி அபிவிருத்தியாளர்களின் எதிர்பார்க்கை, இந்த வகையில் இம்மாற்றத்தை நல்ல வகையில் அணுகி, பாடசாலைகளை விரைவாக அபிவிருத்தி நோக்கி முன்நகர்த்த பாடசாலை ஆதார முகாமைத்துவ செயலாற்றுகையைச் சிறப்பாகப் பயன்படுத்த வேண்டும் என்பதே என் விருப்பமாகவுள்ளது.

**இறுதியாக இலங்கை நாட்டில் தேசிய கல்விக் கொள்கை மாற்றங்கள் தொடர்பாகத் தாங்கள் கருதுவது என்ன?**

தேசிய கல்விக் கொள்கையை ஆக்குவோர், சீர்திருத்தங்களை மேற்கொள்வோர் கருத்தில் கொள்ளவேண்டிய முக்கிய விடயம் - இலங்கை மிக வறிய குறைந்த அபிவிருத்தி கொண்ட நாடு என்ற விடயமாகும். இதனைச் சர்வதேச மட்டத்துக்கு உயர்த்தும் நோக்குடன் பரந்த எமது கல்வியமைப்புகளுக்குத் தேவையான பொருள் சார்ந்த வளங்களை இறக்குமதி செய்யப்போதிய பணம் நாட்டில் இல்லை. இலங்கையைப் பொறுத்தவரை நிஜமானதும், பொருத்தமானதுமான தரக் கட்டுப்பாடுகள், அளவீடுகள் என்பவற்றை இனம் கண்டு அதன் பிரகாரம் கிரமமாகவும், படிப்படியாகவும் அபிவிருத்தியடையும் ஒரு தன்னிறைவான முயற்சியாக அபிவிருத்தியை இனங்காண வேண்டியுள்ளது.

நேர்காணல்
ப.இராஜேஸ்வரன்

# சுனாமி தாக்கி 11 மாதங்களுக்குப் பின் தந்தையின் சடலத்தைக் கண்ட சிறுமி!

பேர்மிங்கோம்

கடந்த டிசெம்பரில் நிகழ்ந்த சுனாமி அனர்த்தத்தின்போது கடலுக்குள் இழுத்துச் சென்றவர்களின் சடலங்கள் ஒவ்வொன்றாகக் கரையொதுங்கி வருகின்றன.

கரையொதுங்கும் சடலங்கள் பல், கைரேகை மற்றும் மரபணு சோதனை மூலமாக அடையாளம் காணப்பட்டுவருகின்றன. சுனாமியால் காணாமற்போன தனது தந்தையை 11 மாதங்கள் கழித்து சடலமாகப் பார்த்தாள் ஒரு தாய்லாந்துச் சிறுமி.

கடந்த ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி வங்கக் கடலில் ஏற்பட்ட சுனாமிப் பேரலைகள் தாய்லாந்து, அந்தமான், இலங்கை, தமிழகம் என்று வங்கக் கடலின் பல்வேறு கடலோரப் பகுதிகளில் வசித்த மக்களைக் கபளீகரம் செய்தன. ஆயிரக்கணக்கான மக்களைக் காவு கொண்ட சுனாமியில் தெற்குத் தாய்லாந்தில் மட்டும் ஐந்தாயிரத்து 395 பேர் உயிரிழந்தனர். இரண்டாயிரத்து 817 பேர் காணாமற் போயினர்.

இறந்தவர்களின் சடலங்கள் அவ்வப்போது கரையொதுங்கி வருகின்றன. தாய்லாந்தில் முகாமிட்டுள்ள சர்வதேச மருத்துவ ஆய்வுக் குழுவினர் சடலங்களை கைரேகை, பற்கள் மற்றும் மரபணு ஆகிய சோதனைகள் மூலமாக அடையாளம் கண்டு வருகின்றனர்.

இதுவரை இரண்டாயிரத்து 900 சடலங்கள் இதுபோன்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

சுனாமி பேரலைகளின் தாக்குதலால் சிதறுண்ட குடும்பங்களில் புக்கெட் தீவில் வசிக்கும் சுவானீ மாலிவன் என்ற சிறுமியின் குடும்பமும் ஒன்று. தாய், தந்தை, பாட்டி, இரண்டு அத்தைகள் என்று குடும்பத்தையே சுனாமிக்கு இரையாக்கிவிட்டுத் தவித்த சுவானீ தனது பாட்டி மற்றும் அத்தைகளுக்கு இறுதிச் சடங்குகள் நடத்திவிட்டு தாய், தந்தையை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

கடந்த செப்ரெம்பரில் கரையொதுங்கிய தாய் பிரித்தாவின் சடலத்தைக் கண்ட சுவானீ எப்படியாவது தந்தையைப் பார்த்துவிடலாம் என்று நம்பியிருந்தாள்.

ஆனால், பாவம் 11 மாதங்கள் கழிந்த நிலையில் கடந்த வாரம் அவளது தந்தை உடும் (வயது 40) சடலமும் கரையொதுங்கியது. சுவானீ தனது தாத்தா ஹிம் தெம்னாவுடன் அரசு கட்டிக் கொடுத்த இல்லத்தில் வசித்து வருகிறாள்.

சுவானீ மட்டுமல்ல ஏராளமானோர் தங்களுடைய உறவினரின் சடலமாவது கிடைக்காதா என்று நாள் தோறும் ஏங்கி வருகின்றனர். அடுத்த ஆண்டு பெப்ரவரி வரை தாய்லாந்தில் முகாமிட்டிருக்கும் சர்வதேசக் குழுவினர், அதன் பின்பு தாய்லாந்துப் பொலிஸாரிடம் பணியை ஒப்படைக்க முடிவு செய்துள்ளனர்.

அடுத்த ஆண்டு மேலும் 800 சடலங்கள் மீட்கப்படும் என்று எதிர்பார்ப்பதாகவும் கூறினர்.

ஆண்டுகள் பல கடந்தாலும் சுனாமி பதித்த சோகச் சுவடுகள் கடற்கரை ஓரங்களிலும், கடலோர மக்கள் மனதிலும் ஆழமாகப் பதிந்துள்ளன.

# லண்டன் குண்டு வெடிப்பு சூத்திரதாரி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்!

லண்டன்

லண்டனில் கடந்த ஜூலை மாதம் 7ஆம் திகதி சுரங்க ரயில்களில் தொடர் வெடிகுண்டுத் தாக்குதல் நடைபெற்றது.

இதில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகினர். 100 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

இந்த நிலையில் ஜூலை 21 ஆம் திகதியும் லண்டனில் 4 இடங்களில் வெடிகுண்டுத் தாக்குதல் முயற்சி நடந்தது. ஆனால் பொலிஸாரின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாக உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டது.

இந்த வெடிகுண்டுத் தாக்குதல் தொடர்பாக ஏற்கனவே 4 பேரை லண்டன் பொலிஸார் கைதுசெய்தனர். வேறு சிலரை பொலிஸார் தேடிவந்தனர். இந்த வழக்கில் 21 பேர் மீது லண்டன் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இந்த வழக்கில் தேடப்பட்டுவந்த முக்கிய குற்றவாளி நேற்று முன்தினம் லண்டனில் கைதுசெய்யப்பட்டார்.

வெடிகுண்டுத் தாக்குதல் நடத்திவிட்டு வெளிநாட்டுக்குத் தப்பியோடிய அவர் 6 மாதங்களுக்கு மேலாகத் தலைமறைவாக இருந்தார்.


எத்தியோப்பியா நாட்டின் அடிஸ் அப்பாஸ் நகரிலிருந்து விமானத்தில் லண்டன் வந்து சேர்ந்த அவரை விமான நிலையத்திலேயே பொலிஸார் கைதுசெய்தனர்.

லண்டன் நகரில் மீண்டும் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தும் திட்டத்துடன் அவர் வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஆனால் அவரது பெயரை பொலிஸார் வெளியிடவில்லை.




# மோட்டார் சைக்கிளில் தப்பிப்பதற்கு தயாரான வேளையே பிடிபட்டேன்

## தான் கைதானதை விபரிக்கிறார் சதாம்



லண்டன்

மோட்டார் சைக்கிளில் தப்பித்து வேறிடத்திற்குச் செல்ல முற்பட்ட வேளையே அமெரிக்கப் படையினர் தன்னைப் பிடித்ததாக ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹூசைன் முதன் முதலாகத் தெரிவித்துள்ளார்.

லண்டனிலிருந்து வெளியாகும் சன் பத்திரிகைக்கு தனது வழக்கறிஞர் ராம்சே கிளார்க் மூலம் சதாம் ஹூசைன் அளித்த பேட்டியிலேயே இந்த விபரம் வெளியாகியுள்ளது.

அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் உயிர் பிழைக்க ஓடிய சதாம், தனது சொந்த ஊரான திக்ரித் அருகே உள்ள ஒரு பண்ணை நிலத்தில் பூமிக்கடியில் உருவாக்கப்பட்ட குகை வீட்டில் பதுங்கியிருந்தார். அங்கேயே அவருக்கு சாப்பாடு உட்பட்ட வசதிகள் கிடைத்து வந்தன.

இந்த நிலையில் ஒரு நாள் தனது குகை வீட்டிலிருந்து வெளியே வந்தார் சதாம். சுரங்கப் பாதையில் நுழைந்து வெளியே வர முயன்ற போது விஷவாயு தாக்கி சில நிமிடங்கள் உணர்வின்றி மயங்கிக் கிடந்தார்.


அதன் பின்னர் அவர் நிலப்பரப்புக்கு மேல் வந்தபோது அந்தப் பகுதி முழுவதும் இராணுவ வீரர்கள் சூழ்ந்திருக்கக் கண்டார். முன்னதாக அங்கிருந்து ஒரு மோட்டார் சைக்கிளில் தப்பித்து வேறிடத்துக்குச் செல்ல வேண்டும் என்று திட்ட மிட்டிருந்தார்.

ஆனால், ஏற்பாடு செய்திருந்த மோட்டார் சைக்கிள் அங்கு இல்லை. தான் தங்கியிருந்த வீட்டின் உரிமையாளர் தன்னை ஏமாற்றி விட்டதை அப்போதுதான் சதாம் உணர்ந்தார்.

அமெரிக்க வீரர்களுக்கு சதாம் தங்கியிருந்த பதுங்கு குழியைப் பற்றி அறிந்திருக்க வாய்ப்பில்லை. தான் காட்டிக் கொடுக்கப்பட்டதை, ஏமாற்றப்பட்டதை அப்போதுதான் சதாம் உணர்ந்தார். அதன் பின் அமெரிக்கப் படைகள் அவரைச் சுற்றிவளைத்துப் பிடித்தன.

சதாம் அடிக்கடி இந்த பதுங்கு இல்லத்திலிருந்து வெளியேறி வெவ்வேறு இடங்களிலுள்ள தனது ஆதரவுப் படையினரை வழிநடத்துவது வழக்கம்.

சில தினங்களுக்கு ஒரு முறையாவது மீண்டும் இதே இடத்துக்கு திரும்பி விடுவார். இதை எப்படியோ மோப்பம் பிடித்த எதிரிகள் அவரைச் சுற்றிவளைத்து விட்டனர். குகை வீட்டுக்கு அடிக்கடி வந்து போனதுதான் தான் செய்த மிகப் பெரிய தவறு என்று சதாம் வருத்தம் தெரிவிக்கிறார்.



இத்தாலியின் ரோம் நகருக்கு அருகே ரோக்காசிக்கா ரயில் நிலையத்தில் வேகமாக வந்த 2 அதிவேக ரயில்கள் நேருக்கு நேர் மோதின. இதில் ஏராளமான பெட்டிகள் தடம் புரண்டன. 40 இற்கும் மேற்பட்ட பயணிகள் காயமடைந்தனர். இவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக உள்ளது.

# 17 பயணிகளுடன் சென்ற விமானம் மியாமி கடற் பகுதியில் வீழ்ந்தது!




மியாமி

அமெரிக்காவிலுள்ள மியாமி கடற்கரை அருகே நேற்று முன்தினம் பயணிகள் விமானமொன்று கடலில் விழுந்து மூழ்கியதில் 20 பேர் பலியாகினர்.

இந்தச் சம்பவம் குறித்து அமெரிக்கக் கடற்படையின் பெண் செய்தித் தொடர்பாளர் டானியல் டி மரினோ கூறியதாவது -

அமெரிக்காவின் மிக அழகிய நீண்ட கடற்கரை நகரான மியாமிக்கும் - பஹாமாவுக்கும் இடையே பயணிகளை ஏற்றிச் செல்லும் விமானம் நேற்று முன்தினம் 17 பயணிகள் மற்றும் மூன்று விமான ஊழியர்களுடன் பிமினி தீவிலிருந்து புறப்பட்டது.

இந்த விமானம் கடலிலிருந்து கிளம்பிச் செல்லும் கடல் விமானம். பிமினி தீவிலிருந்து கிளம்பிச் சென்ற சில நிமிடங்களில் விமானம் விபத்துக்குள்ளாகிக் கடலில் வீழ்ந்தது.

விமானம் விழுந்த இடம் அமெரிக்காவில் கப்பல் செல்லும் முக்கிய கால்வாய்ப் பகுதி. இந்தச் சம்பவத்தில் விமானத்திலிருந்த அனைவரும் இறந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இதுவரை 14 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ளவர்கள் பற்றிய விவரம் தெரியவரவில்லை. மீட்புக் குழுவினர் தொடர்ந்து தேடுதல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தை நேரில் பார்த்தவர் உள்ளூர் தொலைக் காட்சியில் கூறுகையில் - பறந்து கொண்டிருந்த விமானம் திடீரென வானில் வெடித்தது. விமானம் வெடித்தவுடன் மிகப்பெரிய நெருப்புக் கோளம் வானில் தோன்றியது. தொடர்ந்து புகை மூட்டம் ஏற்பட்டது. விமானத்தின் பாகங்கள் மியாமி கடற்கரைப் பகுதியில் விழுந்தன எனத் தெரிவித்தார்.

# இஸ்ரேல் தேர்தல் கருத்துக் கணிப்பில் ஏரியல் ஷரோனின் கட்சி முன்னிலையில்

ஜெருசலம்

இஸ்ரேலில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் ஏரியல் ஷரோனின் காதிமா கட்சி 42 இடங்களைக் கைப்பற்றுமென கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் கடந்த நவம்பரில் லிகுட் கட்சியிலிருந்து விலகி காதிமா என்ற புதிய கட்சியை ஆரம்பித்தார்.

எதிர்வரும் மார்ச் 28ஆம் திகதி இஸ்ரேல் நாடாளுமன்றத் தேர்தல் நடக்கிறது. ஏரியல் ஷரோனின் புதிய கட்சிக்கு மக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது.

இருப்பினும், கடந்த ஞாயிற்றுக் கிழமை 77 வயதாகும் ஏரியல் ஷரோனுக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.


இந்த நிலையில், இஸ்ரேலில் மாரீவ் என்ற பத்திரிகை சார்பில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள தேர்தல் பற்றிக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

நாடாளுமன்றில் 120 இடங்கள் உள்ளன. இதில் காதிமா கட்சிக்கு 42 இடங்களும், லிகுட் கட்சிக்கு 13 இடங்களும் கிடைக்கும் என்று தெரிய வந்துள்ளது.

இஸ்ரேலில் கடந்த 30 ஆண்டுகளாக ஆட்சிப் பொறுப்பிலிருப்பது லிகுட் கட்சியே. இருப்பினும், அந்தக் கட்சியிலிருந்து வெளியேறி புதிய கட்சி ஆரம்பித்த ஏரியல் ஷரோன் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறார் என அரசியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

இதற்கிடையில், பிரதமர் பதவிக்கு யாரை நிறுத்தலாம் என்பது தொடர்பாக லிகுட் கட்சியில் வாக்குப் பதிவு நடந்தது.

இதில் முன்னாள் பிரதமர் பெஞ்சமின் நேதன்யு முன்னிலை பெற்றுள்ளார். இந்தக் கட்சியில் பதிவு பெற்ற ஒரு லட்சத்து 30 ஆயிரம் உறுப்பினர்கள் உள்ளனர். இருப்பினும், வாக்குப் பதிவில் குறைந்த அளவு உறுப்பினர்களே பங்கேற்றதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



கருத்துக் கணிப்பில் காதிமா கட்சி முன்னணி பெற்றாலும், அந்தக் கட்சி ஏரியல் ஷரோனை நம்பியே உள்ளது. அவருக்கு தற்போது 77 வயதாகிறது. நெஞ்சுவலி ஏற்பட்டு அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எனவே, அந்தக் கட்சியை நம்பிப் பிரயோசனமில்லை என்ற ரீதியில் எதிர்க்கட்சியினரின் தேர்தல் பிரசாரம் இருக்கலாம் என்று அரசியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தடையின்றி கல்வியைத் தொடர படையினர் வழி விடவேண்டும்!

## தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் மகஜர்

யாழ்ப்பாணம்—

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அத்துமீறி உள்நுழைந்த பொலிஸார் - தொழில்நுட்பக் கல்லூரி மாணவனைத் தாக்கி கைதுசெய்ததைக் கண்டித்தும், கல்விச் செயற்பாட்டை தடையின்றித் தொடர்வதற்கு படையினர் வழிவிடக் கோரியும் - தொழில்நுட்பக் கல்லூரி, உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் நேற்று இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும், யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடமும், மனித உரிமை ஆணைக்குழுவிடமும் மகஜர்களைக் கையளித்தனர்.

வாகனங்களில் சென்றே மாணவர்கள் இந்த மகஜர்களைக் கையளித்தனர். பல்கலைக்கழக மாணவர்களின் அமைதிப் பேரணி சென்றபோது படையினர் மூர்க்கத்தனமாக தாக்கியதை அடுத்தே -

தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் பேரணியாகச் செல்வதைத் தவிர்த்து வாகனங்களில் சென்று இந்த மகஜர்களைக் கையளித்தனர்.

நேற்று மாணவர்களின் மகஜர் கையளிப்பு நிகழ்வு இடம்பெற்றபோது - கைலாச பிள்ளையார் கோவிலடி, நல்லூர் பின் வீதி ஆகிய பகுதிகளில் பொலிஸார் குவிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களை மறித்து சோதனையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## அடிகாயங்களுக்கு உள்ளானவர் நெஞ்சுவலியால் உயிரிழந்தார்!

வட்டுக்கோட்டை—

இனந்தெரியாதோர் தாக்கிய சம்பவத்தில் அடிகாயங்களுக்கு உள்ளான ஒருவர் பின்னர் உயிரிழந்தார்.

வட்டுக்கோட்டை - செட்டியார் மடத்தைச்சேர்ந்த வைத்தி செல்வநாயகம் (வயது-68) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

நேற்றுமுன்தினம் உயிரிழந்த குறித்த நபர் வீட்டினுள் இருந்த போது இனந்தெரியாதோர் உள்ளே புகுந்து செயின்கள், தடிகள், பொல்லுகளால் தாக்கிவிட்டு தப்பியோடிய தாகத் தெரிவிக்கப்படுகிது.

மேற்படி நபர் தனியார் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று விட்டு தமது வீட்டில் இருந்தார். இவருக்கு நேற்று அதிகாலை 2 மணியளவில் நெஞ்சு வலி ஏற்பட்டு இறந்தாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, இவர் நேற்று முன்தினம் காலை வேறு ஒருவர் வீட்டினுள் கைகலப்பில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து, மல்லாகம் நீதவான் பொலிஸாருடன் வந்து சடலத்தை பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## புங்குடுதீவுப் பகுதியில் படையினர் தேடுதல்!

யாழ்ப்பாணம்—

புங்குடுதீவுப் பகுதியில் நேற்றுக் காலை கடற்படையினர் மேற்கொண்ட பாரிய சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையின்போது - 12 பேர் கைது செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

புங்குடுதீவு பிரதேச செயலகத்தை அண்மித்த பகுதிகளிலேயே படையினர் இந்தத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 9 மணி முதல் 10 மணி வரை சுமார் ஒரு மணி நேரம் இந்த சுற்றிவளைப்பு தேடுதலில் ஈடுபட்ட படையினர் - வீடுகளிலும், வீதிகளிலும் நின்றோரை கைதுசெய்தனர்.

புங்குடுதீவைச் சேர்ந்த பத்மநாதன், ஜீவகுமார், கணேஸ், பவா, சிறீஸ்காந்தன், ராசா, ஜெயந்தன், குமார், பிரபாகரன், கோடீஸ்வரன், சிறீஸ்கந்தராசா, சிறிகாந்தன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

## வாக்கெடுப்பு நடத்தாமலேயே அவசரகாலச் சட்டம் நீடிப்பு!

கொழும்பு—

வாக்கெடுப்பு நடத்தப்படாமலேயே நாடாளுமன்றத்தில் நேற்று அவசர காலச் சட்டம் மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டது. நாடாளுமன்றம் உரிய நேரத்துக்கு முன்கூட்டியே நேற்று மாலை கூட்டப்பட்டதால் அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் பங்கேற்க முடியவில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்திக் கொண்டிருந்தனர். எனினும் சிவாஜிலிங்கம், ஈழவேந்தன் ஆகியோர் இடையில் புறப்பட்டு, நாடாளுமன்ற விவாதத்துக்குச் சென்றபோதும் உரிய நேரத்துக்கு முன்னரே நாடாளுமன்றம் கூட்டப்பட்டு, வாக்கெடுப்பு ஏதுமில்லாமல் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

## படையினரின்...

இந்தச் செயற்திட்டம் அமுல்படுத்தப் படவுள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்தும் பணிக்கு வடபகுதியிலுள்ள இராணுவத்தினர் மட்டுமே ஈடுபடுத்தப்படுவர். இந்தப் புதிய திட்டத்தின் கீழ் வீதிச் சோதனைகள் மற்றும் ரோந்து நடவடிக்கைகளில் இராணுவத்தினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவுள்ளன. அத்துடன், வீடுகளை சோதனை செய்யும் நடவடிக்கைகளை அதிகரிக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய திட்டத்திற்கு இராணுவத்தினருடன் பொலிஸாரும், விமானப்படையினரும் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை - குடாநாட்டில் ஏற்பட்டுள்ள பதற்றநிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக மேலதிக பொலிஸார் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த பெரேரா தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

இதேவேளை - யாழ்ப்பாணத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்தது.

## யாழ்ப்பாணத்தில்...

பி.பி.சி.தமிழோசைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

சிலநடவடிக்கைகளை படையினர் எடுக்கவேண்டியுள்ளது. அதனை தவிர்க்க முடியாது. இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது சில சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் எனினும் படையினர் பொது மக்களைத் தாக்கவில்லையெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஆனால், இதனை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது. உங்களுடைய நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டாமென நாம் கூறவில்லை. பொதுமக்கள்மீது நீங்கள் கடுமையான போக்கை பின்பற்றுவதை நாம் அவதானிக்கின்றோம். இதை நீங்கள் நிறுத்தவேண்டுமென நாம் வலியுறுத்தினோம்.

அதற்கு அவர்கள் தாங்கள் இயன்றளவு பொதுமக்கள் மீது வன்முறையை பிரயோகிக்காத வகையில் செயற்படவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களுக்கு விடுதலைப்புலிகள் மீது அவர்கள் குற்றம் சுமத்தவில்லை. மாறாக இந்த வன்முறைகளுக்குப் பின்னால் இயக்கமொன்று இருப்பதாக கூறினர்.

ஆனால், எம்மைப்பொறுத்த வரை நாங்கள் அவ்விதமாக செயற்படுபவர்கள் தொடர்பாக பேசுவதற்கு வரவில்லை. எம்முடைய கருத்து என்னவெனில் பொதுமக்கள் மீது வன்முறைகள் பிரயோகிப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. அதை தடுக்க வேண்டுமென கூறினோம் எனத் தெரிவித்தார்.

## கண்காணிப்புக்..

அரசாங்கத்துடனான சமாதானப் பேச்சுவார்த்தைக்கான அனுசரணையாளராக நோர்வே உள்ளது. ஏற்கனவே அரசாங்கம் போர்நிறுத்த உடன்படிக்கையை உடனடியாக முழுமையாக நிறைவேற்ற வில்லை.

அண்மைக்காலமாக போர்நிறுத்த உடன்படிக்கையை முற்றாகச் செயலிழக்க வைப்பதற்காக பெண்கள் மீதான கொடூரமான பாலியல் வன்முறைகள் சுற்றிவளைப்புக்கள், தேடுதல்கள், அறிவாளர்கள் மற்றும் தமிழ்தேசப்பற்றாளர்கள் மீதான படுகொலைகள், பொதுமக்கள் மீதான துப்பாக்கிச் சூடுகள் தடியடிகள், மாணவர்களாலும் அறிவுஜீவிகளாவும் முன்னெடுக்கப்பட்ட ஊர்வலங்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதல்களில் ஆயுதப்படையினரும் ஒட்டுக்குழுக்களும் ஈடுபட்டுவருகின்றன.

படையினரதும், பொலிஸாரதும், ஒட்டுக்குழுக்களதும் கட்டுமீறிய இந்தச் செயற்பாடுகள் போர்நிறுத்த உடன்படிக்கையை மிக நெருக்கடிக்குள் தள்ளிவிட்டுள்ளன. அத்துடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பணிகளுக்கு நேரடியான இடையூறுகளை விளைவிக்கின்றன.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணிகள் படையினரின் அராஜகத்தையும், மக்கள் மீதான பயங்கரவாத வன்முறைகளையும் வெளிக்கொண்டு வருவதுடன் தமிழர் தரப்பின் நியாயப்பாடுகளையும் அனைத்துலக அரங்கில் தெளிவுபடுத்துகின்றன.

எனவே இதற்கான வாய்ப்பினை அதிகரிக்கும் வகையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரின் சுதந்திரமான பணிகளுக்கு எவ்வகையான அழுத்தங்களையும் நெருக்கடிகளையும், இடையூறுகளையும் விளைவிக்காது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் அவர்களது கண்காணிப்பாளர்களுக்கும் தமிழ் மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு யாழ்.மாவட்ட அரசியற்துறையினர் கேட்டுள்ளனர்.

## கல்வியங்காட்டில்...

அடுத்து யாழ். - பருத்தித்துறை வீதி யூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருந்தது. வீதியில் காணப்பட்ட போக்குவரத்துச் செய்த பொது மக்கள் படையினரால் கண்டபடி தாக்கப்பட்டனர்.

கல்வியங்காட்டைச் சேர்ந்த 28 வயதுடைய பண்டாரம் சுரேஷ்குமார், கட் டப்பிராயைச் சேர்ந்த 24 வயதுடைய அன்னலிங்கம் ரஜீபன் ஆகிய இருவருமே படையினரால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கைக்குண்டுத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து கல்வியங்காடு, இருபாலை பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்கள் உடனடியாக இழுத்து மூடப்பட்டன. இந் தப் பகுதிகளில் சில மணிநேரம் பதற்றம் நிலவியது.

யாழ். - பருத்தித்துறை வீதியூடான போக்குவரத்து பலாலி வீதியூடாகச் சென்று கோப்பாய் சந்தியூடாகவே நடைபெற்றது.

## கச்சாயில்...

வீசப்பட்டதுடன், தானியங்கித் துப்பாக்கிகளாலும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சம்பவத்தில் இராணுவக் கோப்ரல் ஒருவர் பலியானதாகவும் -

மேலும் இரண்டு மேஜர் தர அதிகாரிகள் உள்ளிட்ட 5 படையினர் காயமுற்றதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் விதாரணகே தெரிவித்தார்.

தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து அந்தப் பகுதிக்கு உதவிப் படைகள் விரைந்து சென்று காயமுற்ற இரண்டு மேஜர்கள் மற்றும் படையினரை மீட்டு தம்புதோட்டம் இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

அங்கிருந்து இவர்கள் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு ஹெலிகொப்டர்மூலம் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அரியாலையில்...

அதேவேளை - ஜீ.எச்.சுசந்த என்ற இராணுவக் கோப்ரல் நேற்று பிற்பகல் 2.50 மணியளவில் சுண்டுக்குளியில் இடம்பெற்ற தாக்குதலில் காயமடைந்தார்.

இவரும் பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

மேலும், நேற்றுமுன்தினம் மாலை 6 மணிக்கும் 8.30 மணிக்கும் இடையில் வண்ணார் பண்ணை, பருத்தித்துறை, ஆனைப்பந்தி ஆகிய பகுதிகளில் கிரனேட் வீசியும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் தாக்குதல் நடத்தப்பட்டதாகப் படைத்தரப்பு தெரிவித்தது.

எனினும் இந்தச் சம்பவங்களில் படைத் தரப்பில் சேதங்கள் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இணைத் தலைமை...

வேண்டிய முக்கியமான ஒரு நாடாகும்.

குறைந்த பட்சம் இந்தியாவின் ஆசியுடனேயே இறுதி சமாதானத்தை நாம் இலங்கையில் அடையமுடியும்.

இதைவிட பொருளாதார அபிவிருத்தி, கலாசாரம், கல்வி போன்ற விடயங்கள் குறித்தும் நான் கலந்துரையாடவுள்ளேன். இந்தியா இலங்கைக்கு உதவிவழங்கும் ஏனைய இணைத்தலைமை நாடுகளுடன் இன்னொரு இணைத்தலைமை நாடாக பங்கேற்று வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் சகல பாகங்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டுமென நான் விரும்புகிறேன்.

சமாதான முயற்சியை முன்னெடுப்பதற்கு விடுதலைப் புலிகள் தயாரெனில் நாளையதினமே புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க நான் தயாராக உள்ளேன். இதன் அடிப்படையிலேயே நோர்வே அனுசரணைப் பணியை தொடருமாறு அவசரமாக அழைப்பு விடுத்தேன்.

ஐரோப்பிய நாட்டில் பேச்சு நடத்த வேண்டுமென விடுதலைப்புலிகள் கூறியிருப்பது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. ஆனால், எமது நிலைப்பாட்டில் நாம் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

வடக்கு - கிழக்கு மற்றும் தெற்கில் வாழும் மக்கள் 450 வருடங்களுக்கு மேலாக அந்நியரின் ஆட்சியின் கீழிருந்து பழகிப்போனவர்கள். அவர்களுக்கு அதிலிருந்து வெளிவருவதற்கு இன்னமும் கடினமாகத்தான் இருக்கின்றது போல் தெரிகின்றது.

ஆனால், விடுதலைப்புலிகளும் தமது நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவார்களென நம்புகின்றேன். கட்டாயம் அந்த மாற்றம் தேவைப்படும்.

இனப்பிரச்சினை விடயத்தில் நடைமுறைக்குச் சாத்தியமான தீர்வு காணப்படவேண்டும். திரும்பத் திரும்ப இது தொடர்பாகக் கதைப்பதில் எவ்வித பயனுமில்லை. முதலில் இரண்டு தரப்பினரும் நேருக்கு நேர் பேச்சுக்களில் ஈடுபடவேண்டும். போர்நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்துவது மற்றும் கொலைகளை நிறுத்துவது குறித்து முதலில் பேசவேண்டும். பின்னர் நாம் ஏனைய விடயங்கள் குறித்துப் பேசலாம்.

இந்திய விஜயத்தின்போது ஐ.தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான், ஜாதிகஹெல உறுமயவின் பிரதிநிதி ஒருவர் மற்றும் அமைச்சர்களும் இடம்பெறவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## கோப்பாய்...

இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

## பல்கலைக்கழக சூழலிலிருந்து...

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்று மாலை சந்தித்துப் பேசியது.

பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமான இந்தச் சந்திப்பு சுமார் 2 மணித்தியாலங்கள் நீடித்தது.

இந்தச் சந்திப்பில் தற்போதைய வடக்கு - கிழக்கு பதற்ற நிலைகள் தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் மகிந்த ராஜபக்ஷ நடத்திய முதல் சந்திப்பு இதுவாகும்.

யாழ்ப்பாண வன்முறையை அடுத்து மகிந்த ராஜபக்ஷ விடுத்திருந்த அழைப்பின் பேரில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, கூட்டுப்படைத் தளபதி அட்மிரல் தயா சந்தகிரி, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் -

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக பொதுமக்கள் மீதும், மாணவர்கள் மீதும் இராணுவத்தினர் கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இதனால் குடாநாட்டில் முற்றாக இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது. மக்கள் பீதியுடன் நடமாடி வருகின்றனர். மக்கள் மீதான இவ்வாறான கெடுபிடிகள் தொடர்ந்து நடைபெற்றுவருவது சமாதான முயற்சிகளில் பாதிப்பை ஏற்படுத்தும்.

புங்குடுதீவில் இளம் பெண் கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய பின்னர் படுகொலை செய்யப்பட்டமை, பல்கலைக்கழகத்தினர் அமைதிப் பேரணியில் ஈடுபட்ட வேளை - அதைத் தடுத்துநிறுத்திய படையினர் - துணைவேந்தர், பீடாதிபதிகள், மாணவர்களை படுமோசமாகத் தாக்கியுள்ளனர். ஓட்டோ சாரதிகள், ஊடகவியலாளர்கள் போன்றோர்கள் தாக்கப்பட்டதுடன் அவர்களது உடமைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களும், மாணவர்களும், பேராசிரியர்களும் தொடர்ந்து தாக்கப்படுவதை இனியும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. எனவே, ஜனாதிபதி உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன், பல்கலைக்கழகத்தைச் சூழவுள்ள இரண்டு காவலரண்களை அகற்றுவதன் மூலம் மாணவர்கள் இயல்பாக தமது கல்வியைத் தொடர முடியுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இதுகுறித்து - கூட்டுப்படைத் தளபதி தயா சந்தகிரி, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரிடம் குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாக உடனடியாக ஜனாதிபதி கேட்டறிந்தார். இதன்பின்னர் கருத்துத் தெரிவித்த மகிந்த ராஜபக்ஷ- பொதுமக்கள் மீது இனிமேல் தாக்குதல் நடத்தப்படமாட்டாதென்றும், பல்கலைக்கழகத்தைச் சூழவுள்ள இரு காவலரண்களும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அங்கிருந்து அகற்றமுடியாது எனத் தெரிவித்ததுடன் -

சோதனைச் சாவடிகளில் இராணுவத்தினருடன் பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என்றும் மக்கள் மீதான சோதனை நடவடிக்கைகளையும், அடையாள அட்டை பார்வையிடுவதையும் பொலிஸார் மேற்கொள்வர் என்றும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267 , நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.12.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.